SUPPLEMENT TO THE "CATHOLIC GUARDIAN"

1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS" JAFFNA.

Telephone: NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

75-ம் புத்தகம் 18-ம் இல. யாழ்ப்பாணம் 1950-ம் ஆண்டு வைகாசிமாதம் 11-ந் திகதி வியாழக்கிழமை—பிரதி சதம் 10

## மாதா கொடுத்த செபமாலை

அவளுடைய நேசமகன் அவளைவிட்டுப் பிரிந்து பதினைந்துவருடங்கள் ஆகிவிட்டன. யோசேப் இளவயதில் நல்ல பையன். அவன் கல்விகற்பதற்கான வசதிகள்யாவும் அவனுக்கு அளிக்கப்பட்டிருந்தன. நன்ருகப் படித்துவந்தான். அவனைப்பார்த்துத் தாய் பெருமைகொள்வாள். அவனுடைய வருங்காலத்தைப்பற்றியும் யோசனைகள் பல செய்திருந்தாள். எப்படியாவது ஒருநாள் அவன் குருஆவான்! அவளுடைய ஏகமகன் சர்வேசுரனுடைய குருஆவான்! இது எவ்வளவு பெரியபாக்கியம்! ஒரு தாயின்உள்ளம் இவ்வித எண்ணங்களினல்மகிழ்கின்றது. தன் மகனுடைய பாக்கியமே அவளுடைய ஏகஆனந்தம்.

ஒருநாள் யோசேப் வீட்டுக்கு வந்தான். "அம்மா, பரீட்சைகள்எல்லாம் முடிந்துவிட்டன. எல்லாப் பாடங்களிலும் நான்தான் முதல்வனகத் தேறியிருக்கிறேன்" என்ருன். தாய் மகிழ்ச்சியினல் அழுதாள். "மகனே, இனிஎன்ன செய்யப் போகிருய்?" எனக் கேட்டாள். அதைக்கேட்டதும் அவனுடைய முகம் விழுந்துவிட்டது. "அம்மா, அதைப்பற்றி இன்று பேசவேண்டாம்; நாளை பார்த்துக்கொள்வோம்" எனச் சொல்லிவிட்டான். இந்தப்பதிலைச் செவியுற்றதும் அவள் தன் இனிய கனவுகள்யாவும் வீணயினஎன்று உணர்ந்துகொண்டாள். "மகனே, நாளைவரைகாத்திருக்கவேண்டாம்; நீ சந்தோஷமாயிருக்கவேண்டும் என்பதே என்விருப்பம்; உன் ஆசைக்கு நான் தடையாயிருக்கமாட்டேன்" என அவள் மொழிந்தனள்.

அவனுடைய நா குளறிற்று. "அம்மா, அந்நியநாடுகளுக்குப் போக நான் தீர்மானித்திருக்கிறேன்; எனக்கு அனுமதி கொடுங்கள்; உங்களுடையவிருப்பத்தை நான்அறிவேன்; அதை நிறைவேற்ற என்னல்முடியாது; தூரநாடுகளுக்குச் சென்று, அங்குபேசப்படும் மொழிகளைக் கற்று, விஞ்ஞான ஆராய்ச்சி செய்யப்போகிறேன்; அமெரிக்காவுக்குப்போய் வடஅமெரிக்காவில் இன்னும் அறியப்படாத பிரதேசங்களுக்குச் சென்று அங்குள்ள மனிதர்களின் பழக்கவழக்கங்களை அறியும்படி ஒரு கூட்டமாக அறிஞர்கள் செல்கின்றனர்; ஒரு செலவுமின்றி நான் அவர்களுடன்செல்லலாம்; அம்மா, சிலவருடங்களே நான் உங்களைவிட்டுப் பிரிந்திருப்பேன்; நீங்கள் தயவுசெய்து அனுமதிகொடுங்கள்."

துயரத்தால் அவளது உள்ளம் நொறுங்கியது. எனினும் அதை வெளிக்காட்டவில்லை. "மகனே, உன் சந்தோஷத்துக்கு நான் இடையூருயிருக்க மாட்டேன்என நான்ஏற்கனவே சொல்லிவிட்டேன்; அமெரிக்கா செல்லுவது உனக்கு நன்மையாயிருக்குமானல் அப்படியேபோய் வா; நான்உன்னை ஆசீர்வதித்து, கடவுள்கையில் ஒப்படைக்கிறேன்." அதற்குமேல் அங்குநிற்க அவளால்முடியவில்லை. தள்ளாடித் தள்ளாடித் தன் அறைக்குட்சென்று அங்கிருந்த பாடுபட்ட சுரூபத்துக்குமுன் முழந்தாளிட்டாள். வெகுநேரம் அப்படியேஇருந்து தன் துயரத்தை யேசுவிடம்சொல்லி அழுதாள். அது அவளுக்குச் சற்று ஆறுதல்கொடுத்தது.

கடைசியாக யோசேப் அவளைவிட்டுப்பிரியவேண்டிய நாள் வந்தது. அவனுக்குக் கைச்செலவுக்குக் கொடுத்துவிட அவளிடம் அதிகம்இல்லை. ஆனல், அவனுடைய வழிப்பிரயாணத்தில் துணையாக ஓர் விலைமதிப்பிடமுடியாத பொருளைக்கொடுக்கத் தீர்மானித்தாள். கடைசிமுறையாக அவனை அவள் அரவணைத்து முத்தமிடுகையில் தன் செபமாலையைப் பையிலிருந்து எடுத்தாள். அந்தச்செபமாலை மணிகள் மரத்தினல்செய்யப்பட்டவை. பலமான தோற்கயிற்ருல் இணைக்கப்பட்டிருந்தன. அந்தத்தில் ஓர் மரச்சிலுவை. நீர் நிரம்பிய தன் கண்களை உயர்த்தி அவள் தன் மகனை நோக்கினள். "மகனே, உனக்கு என்னநேரிடப்போகிறதோ தெரியாது; உன்னைப் பத்தியுள்ளபிள்ளையாக நான்வளர்த்தேன், அப்படியே நீ என்றும் இருப்பாயா?" என வினவினள்.

"அம்மா, அம்மா, நீங்கள் இப்படியும் கேட்கலாமா? நீங்கள் சொல்லியிருக்கும் புத்திமதிகளையும், படிப்பித்துள்ள படிப்பனைகளையும் நான் ஒருபோதும் மறக்கவே மாட்டேன்."

"மகனே, உன்னை நான் நம்புகிறேன். உன் நல்ல பிரதிக்கினைகளைக் கடவுள் ஆசீர்வதிப்பாராக; உன் பிரதிக்கினைகளை உனக்கு ஞாபகப்படுத்தக்கூடிய பொருள்ஒன்று உனக்குக் கொடுக்கப்போகிறேன்; இதோ பார், என்னுடையசெபமாலை; இதை உபயோகித்துவா; உனக்காக நான் எத்தனைமுறை செபித்திருக்கிறேனே தெரியாது; ஆனல், ஒன்று நிச்சயம்; நீ இதை எப்பொழுதும் உன்னிடம்வைத்திருந்து, நேரம் கிடைக்கும்பொழுதெல்லாம் செபமாலை

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## பாத்திமா நாயகியே எழுந்தருள்க!

(கொழும்பு—எஸ். ஜே. அன்ரனி)

சர்ப்பஉருவெடுத்த பிசாசின் தலையைநசித்த தாயேவருக! உமது மகிமைப்பிரதாபத்தால் மானிடரிடையே சமாதானம் நிலவ அருள்சொரியவல்ல அம்பரியேவருக! மானிடர்பாவம் போக்க மானிடவடிவமெடுத்த எம்நாயக யேசு இரட்சகரின் திருஅன்னையே எழுந்தருள்க! உமதுதிருக்குமாரனின்உயிரைச் சிலுவைமீது பலிகொடுத்துப் பாவஅடிமைத்தனத்தை நீக்கி எம்மை உமது மக்களாக்கிய தாயே! இலங்காதுவீபம் தமது திருமுகதரிசனையால் ஞானவளம்பொருந்தியநாடாகத் திகழும்படியாக அருள்பொழிய எழுந்தருள்க!

லூர்துகெபியில் காட்சிதந்த அமலோற்பவ மரியே! சலேத் மலையில் பிரசன்னமான பிரகாச நட்சத்திரமே! கார்மேல் மலையில் உத்தரியமளித்த உபகாரியே! இப்போதுபாத்திமாவில் கோவாடி இறியாவில் தரிசனமாகி உலகசமாதானத்தின் வழியைக்காண்பித்தீர். அவ்வழியே அகிலமக்களும் செல்லத் தாயே உமது கருணையைச் சொரியவேண்டுமென விரும்பும் எமதுஆசைகளைப் பூர்த்திசெய்ய எழுந்தருள்க! அன்ருெருநாள் தமதுஅடியார்களைக் காப்பாற்றச் செபமாலைஎனும் அருள்மாலையைத் தந்தருளினீர். இன்றும் அம்மாலையிடமாக உம்மைப்பூசிக்கும்பக்தகோடிகளின் ஈஸ்பரியே! பாத்திமாகிரியிலிருந்து சமாதான திருத்தூதுடன் உலகமெங்கும் யாத்திரை செய்துவரும்உம்மை இலங்கை மக்களாகியநாம் மனப்பூர்வமாக வரவேற்கின்ருேம். வருக அம்மணி வருக! வருக!!

போர்த்துக்கால் இராச்சியத்திலே பாத்திமாஎனுங்கிராமத்தில் கோவா டி இறியாஎனும் இடத்தில் 1917-ம்ஆண்டு ஐப்பசிமாசம் 13-ந்திகதி பகல்வேளை எழுபதினயிரம்மக்களின் குரலோசை இடியோசைபோல் வானைப் பிளக்கின்றது. "புதுமை ....புதுமை...புதுமை" ஆம் புதுமைதான். இதோ மத்தியானப் பொழுதுஒளிரும் நீலவானத்தில் வெட்டெனப்பிரகாசமின்னல். சிந்தூரமரத்தை ஓர் வெண்மேகம் மூடிக்கொண்டது. அன்னைமரி தாயார் பிரசன்னமாயினர். வெல்லைமலையில் வல்லசுதனை நள்ளிரவில் பெற்றெடுத்துக் கொல்கொதாஎனும் கல்வாரிமேட்டில் மானிடர்க்காகப் பலியாக்கின திருமாதா மோட்ச அலங்காரசோதியாய்க் காட்சி கொடுக்கின்ருர். "நீர் யார்" என்று சிறியலூசியா கேட்டதற்கு "நாமே செபமாலைநாயகி" என்று திருவாய்மலர்ந்தருளிய பரிசுத்ததேவதாயார் தமதுஅருமைமக்களாகிய இலங்கைவாசிகளைச் சந்திக்க எழுந்தருளிவருகின்ருர்.

லூசியா, யாசிந்தா, பிரான்சீஸ்குஎனும் மூன்று இடைப்பிள்ளைகளுக்கும் பாத்திமாவில் வெளியிட்ட அரியவழியை ஞாபகப்படுத்தவே உலகசுற்றுயாத்திரையாக எம்செல்வநாட்டுக்கு எழுந்தருளும் இவ்வேளை சகல நாடுகளும் சமாதானமாகவாழ இரட்சகரின் திருஅன்னையாம் பாத்திமாமாதாவைவேண்டுவோமாக.

யாத்திரைக்கன்னிகையே! பாவிகளுக்கடைக்கலமே! சமாதானத்தின் இராக்கினியே! பாத்திமா மாதாவே! இலங்கைவாழ் மக்களிடையே ஐக்கியம் நிலவி வளர்ந்தோங்கவும், பஞ்சம் பிணிநீங்கவும் உமது அருள்மாரியை மழைமாரிபோல் பொழிந்தருள எழுந்தருளும் அம்மா! எழுந்தருளும்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாப்பரசரும் திருப்பட்டங்களும்

நிகழும் பரிசுத்தவருடத்திலே எல்லாமாக 22 அர்ச்சியசிஷ்டபட்ட, முத்திப்பேறுபெற்றபட்ட திருவைபவங்கள் நடத்திவைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதனால் இவைகள் நிகழ்ந்து பரிசுத்தவருடம் முடிவாகும்போது, மற்றெந்தப் பாப்புமாரைக் காட்டிலும் அதிகமான அர்ச்சியசிஷ்டர்கள், முத்திப்பேறு பெற்றவர்களை ஆக்கிவைத்த பெருமை பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசருக்கேஉரியதாகும். அப்போது இவர் பதினொருவருடகாலத்திலே 42 சுத்தவாளர்களுக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அல்லது முத்திப்பேறுபட்டம் சூட்டியவராக விளங்குவார். அதாவது தமக்குமுனனே பதினேழுவருடகாலம் திருச்சபையை ஆட்சிசெய்திருந்த பதினொராம பத்திநாத பாப்பானவரைக் காட்டிலும் கூடுதலாக ஒருவரைக் கொண்டிருப்பார். பத்தாம்பத்திநாத பாப்பானவர் பதினொரு வருடத்தில் 15 புதிய அர்ச்சியசிஷ்டர்களையும், முத்திப்பேறு பெற்றவர்களையும் ஆக்கினார். பதின்மூன்றும் சிங்காரய பாப்பானவர் பதினைந்துவருடத்தில் அவ்வாறு 29 பேரை ஆக்கிவைத்தார். இதற்குமுன் அவ்வாறு அதிகம் பெருந்தொகையாகப் 18 பேரை ஆக்கிவைத்தவர் 1775—1796-ம் ஆண்டுகளுக்கிடையிலிருந்த ஆறும்பத்திநாத பாப்பானவரே. 634-ம் ஆண்டுமுதல், அதாவது எட்டாவது ஊர்பான்எனும் பாப்பானவர் சுத்தவாளர்களுக்கு முத்திப்பேறுபட்டஞ்சூட்டுவதைப் பரிசுத்த ஸ்தானத்தினிடம் கையளித்ததுமுதல் 983 பேர் முத்திப்பேறுபட்டம் சூட்டப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 819 பேர் வேதசாட்சிகள். கடந்த 326 வருடகாலத்திலும் அர்ச்சியசிஷ்டபட்டஞ்சூட்டப்பட வேண்டுமென்று கேட்கப்பெற்ற முத்திப்பேறுபெற்றவர்களில் 80 பேரே அர்ச்சியசிஷ்டர்களாயினார்கள். தற்போது திருச்சடங்காசார திருச்சங்கம் ஆயிரம்பேருக்கு இத்திருப்பட்டங்கள் சூட்டும்விஷயமாக ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருக்கிறது.

## ஐந்துலட்சம் யாத்திரிகர்

இப்பரிசுத்தவருடத்தின் முதல் ஆறு வாரங்களிலும் ஐந்துலட்சம் யாத்திரிகர்கள் ரோமாபுரியைத் தரிசித்திருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறதெனப் பரிசுத்தவருடயாத்திரை மத்தியகம் மிற்றி தெரிவிக்கின்றது. இவர்களில் முதற்பெருந்தொகையினராக இத்தாலியர் 70,000 பேர். இவர்களைத் தொடர்ந்து பிராஞ்சியர் 40,000 பேர். ஜேர்மனியர் 32,000 பேர். ஆஸ்திரியரும், பெல்ஜியரும் தனித்தனி 15,000 பேர். பிரித்தானியர் 10,000 பேர். அயர் எனப்படும் சுதந்திர அயர்லாந்தின் சனத்தொகையை ஒப்புநோக்குமிடத்து, அதுவே மிகப்பெருந்தொகையான யாத்திரிகராகப் 10,000 பேரை அனுப்பிவைத்திருக்கின்றது. அங்கிருந்துபோகவிருக்கும் பெரியயாத்திரைக் கோஷ்டி ஒன்றில் 97 வயசுடையவரான வண. லன்கன் சுவாமியாரும் சேர்ந்து கொள்ளவிருக்கின்றார். பிறநாடு ஒன்றிலிருந்து அங்கு யாத்திரைசெய்யும் அதிவிருத்தாப்பிய யாத்திரிகர் இவரே.

## லாசறுவின் கல்லறை

நம்முடைய திவ்வியகர்த்தர் மரித்தவர்களிடமிருந்து லாசறுவை உயிர்ப்பித்தருளிய இடமாகிய பெத்தானியிலுள்ள கோவிலானது பரிசுத்தநாட்டின் பரிபாலனரால் ஏறக்குறைய அடியடிநிலமாகவாங்கி அதன் புராதன நிலைமைக்குத் திரும்பவும் முற்றாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தக் கோவில் ஆதிக்கிறீஸ்தவர்களால் அமைக்கப்பட்டது. ஜெருசலேமின் லத்தீன் இராச்சியம் வீழ்ச்சியடைந்த பின்னர் இஃது முஸ்லீம்களின்கீழ் ஓர் பிரத்தியேகவாசஸ்தலமாயிற்று. ஆதிக் கட்டிடத்தின் மாதிரியை இப்போதுமே காணலாம். மார்த்தாள், மரியம்மாளது வீட்டின் ஓர்பாகமென்று நம்பப்படுகின்ற அதிகம்பழைய கற்பதித்த தளம் ஒன்றும் கண்டறியப்பட்டிருக்கிறது.

## மேரியின் சிறியஆட்டுக்குட்டி

அர்ச். பேதுருவானவர் ஆலயத்திலே 40,000 பரிசுத்தவருடயாத்திரிகர்களுக்குச் சென்றசித்திரைமாதம் 16-ந் திகதி பரிசுத்தபாப்பரசர் அருளிய ஓர்பேட்டியின்போது மேரி பால்மீசாத்திஎனும் ஏழுவயதுச்சிறுமி வெண்பனிபோலும் வெண்மையான சிறியதோர் செம்மறியாட்டுக்குட்டியை அவருக்குத்தெட்சணையாகச் சமர்ப்பித்தாள். ரோமாபுரியிலிருந்து 40 மைல் தூரத்திலுள்ள அனுக்னிஎனும் கிராமத்தில்வசிக்கும் ஓர் இடையனின்மகளான இச்சிறுமி தான்செல்வமாய் வளர்த்த அந்தச் செம்மறியாட்டுக்குட்டியை ஓர்வெகுமானமாக அவருக்குக்கொடுப்பதற்கென்று அர்ச். பேதுருவானவர்ஆலயத்துக்குத் தூக்கிச்சென்றாள். தனதுகரங்களிலே ஆட்டுக்குட்டியுடன் சனக்குழாமை ஊடறுத்துப் பயத்துடனும, பெருங்கஷ்டத்துடனும் அவள்வரக்கண்டபோது பாப்பரசரின்வதனம் சந்தோஷத்தாலே பிரபைகொள்ளலாயிற்று. அவள் அவரிடம் போய்ச்சேர்ந்ததும் அவர்மிகுந்தபட்சத்துடன் அவள்கன்னத்தில்கிள்ளிப் பொன்-வெள்ளையாகிய பாப்பரசரின் நிறங்களைக்கொண்ட நாடாக்களால அலங்கரிக்கப்பெறறிருந்த ஓர்கூடையிலே அமைதியாகக்கிடந்த ஆட்டுக்குட்டியைக் கம்பீரத்துடன் பெற்றுக்கொள்ளலாயினர். பாப்பரசர் தமதுபொற்சிம்மாசனத்திலிருந்து முற்புறமாகக்குனிந்து மேரியையும் அவளது ஆட்டுக்குட்டியையும் வரவேற்றபோது அங்குசமுகமாயிருந்த பெருஞ்சனக்குழாமின்மத்தியில் பேருவகை எழலாயிற்று.

## பிரசாதிபதியின் வெகுமானம்

அயர்எனஅறியப்படும் சுதந்திர அயர்லாந்தின் பிரசாதிபதியான திரு. ஒகெல்லிஅவர்கள் இம்மாசத்திலே ரோமாபுரிக்குத் தமது பரிசுத்தவருடயாத்திரையின்போது, பரிசுத்தபாப்பரசருக்குச் சங்மானிக்கவிருக்கின்ற நற்கருணைத் தங்கப்பாத்திரத்திலேபிரசாதிபதியின் சின்னங்களும், பாப்பரசரின் சின்னங்களும் ஒருங்கே பதிக்கப்பட்டிருக்கின்றன. இது 1494-ம் ஆண்டு பொறிஷூல் சந்நியாசமடத்துக்கென்றுசெய்து, தற்போது அந்நாட்டின் தேசியநூதன பொருட்காட்சிச்சாலையில் இருந்துவருவதான தேபேர்க்கோ நற்கருணைப்பாத்திரத்தின் மாதிரியாகச் செய்யப்பட்டுள்ளது. அயர்நாட்டிலே டபிளின், கோர்க்நகர்களின் லோட்மேயர்களாலும் பரிசுத்தவருடத்திற்கென நற்கருணைத் தங்கப்பாத்திரங்கள் பாப்பரசருக்குச் சங்மானிக்கப்பட்டிருக்கின்றன.

## ஐந்துகாயவரமாது

பவேரியநாட்டைச்சேர்ந்த வெய்டென் எனுமிடத்தில் வசித்துவருகின்றவளும், தனது கரங்களிலும், பாதங்களிலும், விலாவிலும், சிரசிலும் கிறீஸ்துநாதரது திருக்காயங்களின் அடையாளங்களைக் கொண்டிருப்பவளுமான தெரேசா நீயூமன் எனும் மாதைச் சென்ற பெரியவெள்ளியன்று பதினாயிரம் யாத்திரிகர் சென்று தரிசித்திருக்கின்றார்கள். இவள் ஒவ்வோர் பெரியவெள்ளிக்கிழமையிலும் திருப்பாடுகளின் காட்சிகளைப் பெற்றுவருவதாகச் சொல்லப்படுவது கத்தோலிக்கஉலகம் அறிந்ததே. ஆறாயிரம் அமெரிக்கர்வரையிலும், ஏழாயிரம் ஜேர்மனியர்வரையிலும்சென்று, அவளைக்கண்டுகொள்வதற்காக அவளுடையவீட்டுக்கு வெளியே நீண்டவரிசைமுறையாகக் காத்துநின்றார்கள். ஏறக்குறைய ஐந்துமணி நேரத்தின்பின் தெரேசா முற்றும்களைகொண்டவளாகக் காணப்படவே வீட்டுக்கதவுகள் பூட்டப்பட்டன. அதனால் இரண்டாயிரம் பேருக்குமேல் அவளைக்காணமலே திரும்பினார்கள்.

## அர்ச். சின்னப்பரின் வாள்

ஸ்பானிய தேசத்திலே ரொலெடோ நகரிலுள்ள எல்லாக்கிணறுகளிலும் தீப்படையினர் இறங்கி அர்ச். சின்னப்பரைவெட்டி வேதசாட்சியாக்கிய புனிதவாளைத்தேடுகின்றனர். ஸ்பானிய தேச உள்நாட்டுக்கலகத்திலே கம்யூனிஸ்தர்கள்கையில் அகப்படாதவாறு அர்ச். ஜெரோம்சபைக் கன்னியாஸ்திரிமார் இந்தவாளைத் தங்கள் மடத்தில் ஒளித்துவைத்திருந்தனர். பின்னர் அவர்கள் வெளியேற நேர்ந்தபோது கிணற்றில்எறிந்து மறைத்துவைத்தனர். பதினைன்காவது நூற்றாண்டிலேரோமையிலிருந்து இந்தவாள் ஸ்பெயினுக்குக் கொண்டுபோகப்பட்டது. இதில் ரோமைச் சக்கரவர்த்திகளின் முத்திரைகளும் பொறிக்கப்பட்டுள்ளன.

## வேதசாட்சிகளின் சினிமாப்படம்

யப்பானிலே சினிமாத்தலைவரும், மனந்திரும்பிக் கத்தோலிக்க திருமறையில் சேர்ந்தவருமான திரு. இகொடா அவர்கள் கோட்ரோநகரில் சினிமா நடிகர்களைப் பயிற்றுதற்கென்று 50 மாணவர்களையடக்கிய ஓர்பாடசாலையை நடத்திவருகின்றார். அத்தோடு அம்மாணவர்களில் 30 பேருக்கு அவர் ஞானோபதேச வகுப்புகளும் முறையாக நடத்திவருகின்றார். "கலையும் சமயமும் கையோடு கைகோர்த்துக் கொண்டு போகவேண்டு"மென்று இவர்கூறுகின்றார். இவர் தயாரித்திருக்கும் சினிமாப்படங்களில் "யப்பானின் இருபத்தாறு வேதசாட்சிகள்" படமும் ஒன்றாகும்.

## சிங்கப்பூர்த் திருயாத்திரிகர்

சியதேச பாங்கொக்நகரையும், மக்காவோவையுஞ்சேர்ந்த 18 பேர் உட்பட 66 கத்தோலிக்கர் நிகழும்வைகாசி மாசம் 23-ந்திகதியன்று சிங்கப்பூரிலிருந்து சூறியென்ரோஎனும் கப்பலிலே ரோமாபுரிக்குத் திருயாத்திரையாகப் புறப்படவிருக்கின்றார்கள். இந்த யாத்திரையை ஒழுங்குபண்ணிவைத்தது, சிங்கப்பூரின் பரிசுத்தவருடயாத்திரைக்கமமிற்றியேயாகும். மலாக்காவின் மேற்றிராணியாரான மகாவந். ஒல்கொமெண்டி ஆண்டவரே இந்த யாத்திரைக்குத் தலைமைவகிப்பார். மலாயாவைச்சேர்ந்த 6 குருமாரும், சியம், மக்காவோவைச்சேர்ந்த 4 குருமாரும் இதில்கலந்துகொள்வார்கள். இத்தாலியிலும், பிரான்சிலும் செலவிடும் 21 தினங்கள்உட்பட இந்தயாத்திரை 60 நாள் நீடித்திருக்கும். ரோமாபுரியில் ஐந்துநாள் செலவிடப்படும்.

---

# துன்பத்தில் இன்பம்

## ஓர் ஆத்துமத்துக்கும் காவற்சம்மனசுக்குமிடையே சல்லாபம்

### அதிகாரம் I

(முன்தொடர்ச்சி)

ஆத்துமம்:— அப்போ என்சம்மனசானவரே! எனக்குநேரிடுவதெல்லாம், மற்ற மனுஷருக்கு நேரிடுவதெல்லாம் எதுவழியாய்வந்தாலும், எவர்வழியாய் வந்தாலும் எல்லாம் எப்போதும் எங்களுக்குத் தேவசித்தத்தினுற்றான் வருகின்றனவா?

சம்மனசு:— ஆம்! ஆம்!! என் அரியஆத்துமமே, பூவுலகத்தில் பாவம் ஒன்றுமாத்திரமே தேவசித்தத்துக்கு விரோதமாய் நடக்கின்றது. ஆனால், மனுஷருடையபகை, சண்டை, கொலை, திருட்டு, ஆவலாதி, குடிவெறிமுதலிய எவ்விதமான பாவங்களினால் என்றாலும் சரி, அவர்களுடையமறதி, அறியாமை, விளக்கமாறுபாடு, கவலையீனம்முதலிய பலவீனங்களினால் என்றாலும்சரி, நெருப்பு, நீர், காற்றுமுதலான பூதியங்களினால் என்றாலும்சரி, ஊர்வன, நகர்வன, பறப்பன, நடப்பன, நீந்துவனமுதலிய சீவசெந்துக்கள் வழியால் என்றாலுஞ்சரி, நாகப்பிசாசுகளினால் என்றாலுஞ்சரி, உன்சொந்தஅறியாமை, குற்றம், பாவங்களினால் என்றாலும்சரி, உனக்கு நேரிடுகிறசகலமும் ஒன்றில் தேவகட்டளையினாலே, ஒன்றில் தேவவிடையினாலே உனக்கு நேரிடுகின்றன். அதாவது தேவசித்தத்தினாலேயே உனக்கு நேரிடுகின்றன. தேவகரங்களில் நின்றே உனக்குவருகின்றன. தேவனாலே உனக்கு அனுப்பப்படுகின்றன.

நீஇப்போது உள்ளாயிருக்கிற நோயும், அந்தநோயினால் உனக்கு வரும் சகலஉபாதனைகளும் உனக்கு இப்போதுள்ள மற்றெவ்வித இக்கட்டிடைஞ்சல்களும் தேவனாலேயே உனக்குவரவிடப்பட்டிருக்கின்றன. இந்தநேரத்திலே உன்னிலும் மகாநிர்ப்பாக்கியராய்ப் பூமியிலே துன்பசாகரத்திலே அமிழ்ந்தி வாதைப்படும் சகலருடைய உபத்திரியங்களையும் தேவனே அவர்களுக்கு அனுப்பியருளினார். அனுப்பியருளுகிறார்.

இப்போது நான்உனக்குத்தெரிவிக்கப் பிரயாசப்பட்ட சத்தியத்தையே பின்வரும் வேதவாக்கியங்கள் தாபிக்கின்றன. நாமேகர்த்தர், வேறெவருமல்ல. நாமே வெளிச்சத்தையும்ஆக்குகிறோம், இருட்டையும் சிருட்டிக்கிறோம். நாமே சமாதானத்தையும உண்டாக்குகிறோம், தீமையையும் விளைக்கிறோம்என்று இசையாஸ்என்னும் தீர்க்கதரிசிவாயினற் தேவன் திருவாக்கருளியிருக்கிறார். (இசை. XLV 7)

உயிர்பிரியச்செய்கிறவரும், உயிர் பின்புவரச்செய்கிறவரும்நாமே, அடிக்கிறவரும், சொஸ்தப்படுத்துகிறவரும் நாமேஎன்று வேறொருவேதவாக்கியம் கூறுகின்றது. (Dewt. XXXII. 39)

நகரத்தினிடத்தேகர்த்தர்செய்யாத தீமையும் உண்டோ! கர்த்தரிடம் நின்று வாராத ஏதும் உபத்திரவமாவது நிர்ப்பாக்கியமாவது உண்டா? என்று ஆமொஸ் தீர்க்கதரிசி வினவுகின்றார். (ஆமொஸ் iii. 6.

சலமோன்என்னும் ஞானவானும் "நன்மையும் தீமையும், சீவியமும் மரணமும், தரித்திரமும் ஐஸ்வரியமும் தேவனிடமிருந்தேவருகின்றன என்கின்றார். தேவகட்டளையின்றி யாதேனும் ஓர்காரியம் நிகழக்கூடுமென்று சொல்லியவன்யார்? என்று ஜெரேமியாஸ் தீர்க்கதரிசி உசாவுகின்றார்.

இப்படிஎத்தனையோ வேதவாக்கியங்களினால் நிரூபிக்கப்பட்ட சத்தியத்தை யார்மறுத்தல்கூடும்? இச்சத்தியத்தை அஞ்ஞானிகளானசாஸ்திரிகளும்சுபாவ அறிவின் ஒளியால் கண்டுபிடித்துத் தங்கள்கிரந்தங்களில் அதனை உருசுப்படுத்தி ஆச்சரியகரமானவிதமாய் எழுதியிருக்கிறார்கள். மேற்கோள் Consolution.

---

— கல்கத்தாநகரிலே காலறாவும், அம்மையும் மும்முரமாகப் பரவிவருகின்றன. எவ்வளவோ பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் கடந்த ஒருவாரத்திலே தினமும் இந்த இரு நோய்களாலும் 120 பேர்வீதம் இறந்திருக்கின்றார்கள். கிழக்குப்பாகிஸ்தானிலிருந்து அகதிகள் தொகையாக வந்திருப்பதும், சுத்தமான குடிதண்ணீர்த் தட்டுப்பாடுமே இருநோய்களும் அவ்வாறுபரவ முக்கியகாரணங்களாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் புருவே!

"ஜெயம்"

மண்ணிலுண்மை இன்பமோங்க என்புருவே—தாயின்
மலரடியைப் போற்றவேண்டும் என்புருவே
புண்ணியத்தின் பொன்னுருவை என்புருவே—கற்பின்
பொக்கிஷத்தைப் பூந்துணரை என்புருவே
தண்ணளி நிறைந்ததாயை என்புருவே—நாங்கள்
தஞ்சமென்றே ஏகவேண்டும் என்புருவே
கோத்திரத்தில் வந்தபோதும் என்புருவே—கோடா
கோடிசெல்வங் கொண்டபோதும் என்புருவே
சாத்திரத்தைக் கண்டபோதும் என்புருவே—இங்கு
சர்வம்ஆட்சி என்றபோதும் என்புருவே
ஆத்துமத்தைப் பாழ்படுத்தில் என்புருவே—ஈற்றில்
ஆகுபயன் ஏதுமுண்டோ என்புருவே
நேத்திரத்துக் கொத்தவளை என்புருவே—சீவ
நேர்கதிக்குப் பொற்கதவை என்புருவே
தோத்திரித்துப் போற்றவேண்டும் என்புருவே—தாயின்
துணைநிதமும் தேடவேண்டும் என்புருவே
நீடுபுகழ் தானிருந்தால் என்புருவே—பூவில்
நிறைசுகந் தமர்இருந்தால் என்புருவே
கூடுவிட்டு ஆவிபோகில் என்புருவே—யாரோ
கூடியுடன் வந்திடுவார் என்புருவே
கோடிடாத செங்கோலினை என்புருவே—என்றும்
குறைவிலா உயர்வளத்தை என்புருவே
வாடிடாத மென்மலரை என்புருவே—திவ்விய
வானமுதைப் போற்றவேண்டும் என்புருவே
பொன்மகிமை பூமகிமை என்புருவே—யாவும்
பொய்மகிமை என்பதுண்மை என்புருவே
தன்மகிமை குன்றிடாதாள் என்புருவே—செல்வத்
தாய்மகிமை போற்றவேண்டும் என்புருவே
எம்மையே புரப்பதற்காய் என்புருவே—முன்பு
ஏகமகனைத்துறந்தாள் என்புருவே
செம்மைத் தயையுடையாள் என்புருவே—தேவி
சேவடியைப் போற்றவேண்டும் என்புருவே
பாவிகளைக் காக்கவேண்டி என்புருவே—தானே
பாத்திமா தலமெழுந்தாள் என்புருவே
சீவியத்தின் ஊற்றணியை என்புருவே—ஞானச்
செல்வியை நாம் போற்றவேண்டும் என்புருவே
புள்ளுறங்கும் பூவுறங்கும் என்புருவே—வீசு
புயலுறங்கும் கடலுறங்கும் என்புருவே
வெள்ளிநிலா மீனுறங்கும் என்புருவே—தாயார்
விரிகருணைக் கதிர்உறங்கா தென்புருவே
அன்னைதுணை அன்னைதயை என்புருவே—ஈங்கு
அரைநிமிட மில்லையென்றால் என்புருவே
இந்நிலமே மாய்ந்திடுமே என்புருவே—செல்வி
இணையடியைப் போற்றவேண்டும் என்புருவே
அந்நியபாழ் நாஸ்திகப்பேய் என்புருவே—மற்றும்
அக்கிரமம் மாளல்வேண்டி என்புருவே
கன்னிமையிற் கேடிலாளை என்புருவே—என்றும்
காசினியிற் போற்றவேண்டும் என்புருவே
தானதர்மந் தபமியற்றி என்புருவே—அம்மா
தந்தமணி மாலையோதி என்புருவே
சேனையை அணிவகுத்து என்புருவே—அன்னை
சேவைசெய்து வாழவேண்டும் என்புருவே
வானமதி போலொளிகால் என்புருவே—இந்த
வையகத்திற் சாந்தியோங்க என்புருவே
ஞானவடி வானவளை என்புருவே—தாயை
நாந்தினமும் போற்றவேண்டும் என்புருவே
செய்கடமை யிற்தவறு தென்புருவே—நாங்கள்
செய்தநிந்தை தான்மறவா தென்புருவே
உய்யவழி தேடவேண்டும் என்புருவே—மாசில்
உற்பவத்தைப் போற்றவேண்டு மென்புருவே
அருந்தனம் மருந்தனையாள் என்புருவே—எங்கள்
ஆக்கைபொரு ளாவியவள் என்புருவே
வருந்திடேல் எனமொழிந்தால் என்புருவே—இன்ப
வானடைதற் கொப்பதாமே என்புருவே
பாவவழி நீங்கவேண்டும் என்புருவே—புண்ய
பாக்யமிங்கு தேங்கவேண்டும் என்புருவே
தேவகோபம் நீங்கவேண்டும் என்புருவே—சத்யம்
தேசமெங்கும் ஓங்கவேண்டும் என்புருவே
சூதறியா வுள்ளம்போல் என்புருவே—மக்கள்
சுத்தமனங் கொண்டுயர்ந்தால் என்புருவே
பூதலமே மோட்சமன்றோ என்புருவே—நன்மை
பூத்துக் குலுங்குமன்றோ என்புருவே

# முடிவைப் பார்!

ஸ்பானியதேச இராசாவாயிருந்த இரண்டாவது பிலிப்பென்னும்அரசன் தனதுமரணவேளை தனதுபுத்திரனை அழைத்துத் தான் அணிந்திருந்த இராசபரிபாலனத்துக்குரிய ஆடையைக்கழற்றிப் புழுக்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த தனது மார்பைக் காண்பித்துக் கூறியதாவது: "ஓ! அரசிளங்குமாரனே! நாம் எப்படிச் சாகிறேமென்றுபார்! சிறப்புக்கும் பெருமைக்குமுரிய இவ்வுலக முடிவைப் பார்" என்றனும். சாவானது திரவியசம்பன்னருக்கும், அதிகாரிகளுக்கும், தனதுபிரசைகளை ஆளும்அரசருக்கும் பயப்படுகிறதில்லையென்றும், நீரோடையைப்போல அழுகுதல் கெட்டுப்போதல் முதலியவைகள் அரசனுக்கும் ஊழியக்காரனுக்கும் சரிசமானமாய் இருக்கின்றனவென்றும் தீயோடோரெற் என்னும் வேதசாஸ்திரி வசனிக்கிறார். அப்படியே இறந்தவன் அரசனயிருந்தபோதிலும் அவன் தனதுகல்லறைக்கு ஒன்றுங்கொண்டுபோகிறதில்லை. அவன் பூலோகத்தில் அடைந்த கீர்த்திஆதியன அவன்உயிர்விட்டபடுக்கையிற்றானே இருக்கின்றன. "ஒருவன் மரணமடையும்போது ஒன்றும் கொண்டுபோகிறதுமில்லை, அவன்மகிமை அவனோடு இறங்குவதுமில்லை"யென்று தாவீதுஇராசா பாடியிருக்கிறார்.

பெரிய அலெக்சாந்தர்மன்னனின் மரணத்துக்குப்பின் ஒர்தத்துவசாஸ்திரி கூறியதாக ஆர்ச். வனத்துஅந்தோனியார் விபரித்துச்சொன்னதாவது: "பாருங்கள்! நேற்று இப்பூமியைமிதித்துலாவினவன் இன்றைக்கு அதிலேயே புதைக்கப்பட்டான். நேற்று அவனுக்கு இந்தப்பூமிமுற்றிலும் போதாமையாய் இருந்தது. ஆனால், இப்போதோ அவன் ஏழடிமண்ணறைக்குள் அடங்கித் திருப்தியாயிருக்கிறான். நேற்று அவன்தனதுயுத்தவீரர்களை இப்பூமியின்கண் நடத்திக்கொண்டிருந்தவன், இப்போதுசுமைசுமக்கும் வேலைக்காரரால் கல்லறைக்குத் தூக்கிக்கொண்டுபோகப்படுகிறான். ஆனால், சர்வசீவதயாபர கடவுளின்வார்த்தையைக் கேட்கவேண்டும். "பூமியின் தூசியே ஏன் கர்வங்கொள்ளுகிறாய்" என்று இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரன் வசனிக்கிறார். ஏ! மனிதனே, நீ தூசியும் சாம்பருமாயிருக்கிறாயென்று காணவில்லையோ? நீஏன் அகங்காரம்கொள்ளுகிறாய்? இவ்வுலக பெருமைசிலாக்கியத்தை அடையும்படி நீஏன் உன்வாழ்நாட்கள்முற்றிலும் சிந்தித்திருந்தாய்? மரணம்வரும்; அப்போதுஉன்னுடையபெருமை சிலாக்கியங்களும், உபாயதந்திரங்களும் முடிவுபெறும். அந்தநாளில் அவர்களுடைய சிந்தனைகள்யாவும் அழிந்துபோகுமென்று தாவீதுஇராசாவே பாடியிருக்கிறார்.

அறுபதுவருடம் ஓர்சிறியகுகையில் அடைபட்டிருந்த வனவாசியான அர்ச். சின்னப்பரின் மரணமானது உரோமாபுரிக்குச் சக்கரவர்த்தியாயிருந்த கொடிய துன்மார்க்கனாகிய நீரோ என்னும் அரசனின் மரணத்தைப்பார்க்கிலும் எவ்வளவோபாக்கியம்பெற்றதாய் இருக்கின்றது. கப்புச்சின்சபையைச் சேர்ந்த சந்நியாசிமார்களில் ஒருவராகிய அர்ச். பீலிக்ஸின் மரணமானது அலங்காரமான இராசசபையில் வீற்றிருந்த—தேவனோடு பகையாளியாய் இருந்த எட்டாவது ஹென்றிஎன்னும் ஆங்கிலேயஅரசனின் மரணத்தைப் பார்க்கிலும் எவ்வளவோ பாக்கியம் பெற்றதாயிருந்தது. அர்ச்சியசிஷ்டவர்கள் பாக்கியமான மரணத்தை அடையவேண்டித் தங்கள்சுயதேசத்தையும், உலகம் தங்களுக்குக்காண்பித்த ஆசாபாசங்களையும், மகிழ்ச்சியையும், சர்வபரித்தியாகஞ்செய்து தரித்திரமும் நிந்தையுமான சீவியத்தை நடத்தினார்களென்பதை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டியது. பாவங்கள்நிறைந்த உலகஆசையையும், ஆபத்தான சமயங்களையும் தடுக்காதிருக்கும் உலகப்பிரியனுக்குப் பாக்கியமானமரணம் கிடைக்குமென்று எதிர்பார்க்கலாமா? பாவிகள் தங்கள்மரணநேரத்தில் தேவனைத்தேடுவார்களானால் அவர்கள்தம்மைக் கண்டுபிடிக்கமாட்டார்களென்று கடவுளே அவர்களை எச்சரிக்கிறார்.

மரணகாலமானது, இரக்கத்துக்குரிய காலமாயிராமல் பழிவாங்குங் காலமாய்இருக்குமென்றும், நாம் அவர்கள்செய்யும் குற்றங்களுக்குத் தகுந்த பழிவாங்குவோமென்றும் தேவன் நமக்குச்சொல்லுகிறார். நமது மனச்சாட்சியும் அப்படியேசொல்லுகின்றது. ஏனெனில், மனிதர் தங்கள மரணவேளையில் தங்களுடையஅறிவு பலவீனமுள்ளதாயும், மங்கலுள்ளதாயும், அவர்களின்இருதயமானது தாங்கள்செய்த பாவங்களினாலும், இன்னும் மற்றக்காரியங்களினாலும் அதிகம் பளுவுள்ளதாயும் இருக்கக்காண்பார்கள். அந்நேரம் அவர்களுக்குத் தந்திரசோதனை அதிகம் பலமாயிருக்கும். அவர்கள் தங்கள்ஆயுசுபரியந்தம் அவைகளுக்கிடங்கொடுத்தும், அவைகளால் செயிக்கப்பட்டும் இருந்தபடியால் அவ்வேளை அதனை எப்படித்தடுப்பார்கள்? அவர்கள் தங்கள்மனதைத் திருப்புகிறதற்கு மிகவும் வல்லமைபொருந்திய வரம் வேண்டியிருக்கும். கடவுள் அவர்களுக்கு அப்படிப்பட்டவரத்தைக் கொடுக்கக் கடமையுள்ளவராய் இருக்கிறாரா? அவர்கள்காண்பித்த துன்மாதிரிகையான நடத்தைக்கும், ஒழுங்கீனமான நடத்தைக்கும்இப்படிப்பட்ட வரங்களையடையப் பாத்திரவான்களாய் இருப்பார்களா? அந்தக்கடைசிநேரத்திற்றான் அவர்களின் முடிவற்ற பாக்கியமும், முடிவற்ற நிர்ப்பாக்கியமும் தங்கியிருக்கிறது. கடைசியாய் ஒருவன் இவைகளைச் சிந்தித்துநடப்பானேயாகில் மரணவேளை அவன்கலங்கவேண்டி வாராதன்றோ!

## வடஇலங்கைச் சங்கீதசபை,

யாழ்ப்பாணம்.

வடஇலங்கைச் சங்கீதசபையாரால் நடாத்தப்படும் சங்கீதபரீட்சை, யாழ்ப்பாணம் ஸ்ரான்லி அரசினர் மத்திய பாடசாலையில் இம்மாதம்நடைபெறும். சாஸ்திரப் பரீட்சை 13-5-50 சனிக்கிழமை காலை 9 மணி தொடங்கியும், பயிற்சிப்பரீட்சை 15-5-50 திங்கட்கிழமை தொடங்கியும் பகுதி, பகுதியாக நடாத்தப்படும். இவ்வாண்டு இப் பரீட்சைக்கு ஆறு பிரிவுகளிலும் 253 பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். இச்சபையாரால் வழங்கப்படும் சங்கீத ஆசிரியர் தாரதரப்பத்திரம், இலங்கை வித்தியாபகுதியினரால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதால், தாரதரம் பெற்றவர்கள், ஆசிரியராகப் பதிவுசெய்வதற்குத் தகுதியுடையவராவர். சென்னைச்சர்வ கலாசாலையின் இந்தியசங்கீதப் பகுதித் தலைவரும் பேராசிரியருமான திரு. P. சாம்பமூர்த்தி, B. A, B. L. அவர்கள் இவ்வாண்டுப்பரீட்சை நடாத்துவார்கள்.

## 12-ம் வருடஞாபகம்

வண. எஸ். ஏ. பெஞ்சமின்சுவாமியார்அவர்கள் மரணமான பன்னிரண்டாம் வருடபூர்த்தி நிகழும் வைகாசி மாசம் 13-ந் திகதி வருகின்றமையால் வதிரிஅர்ச். அந்தோனிமுனீந்திரன்ஆலயத்தில் அவருடைய ஆத்துமஇளைப்பாற்றிக்காக ஓர் திவ்வியபூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இதைக்கண்ணுறும் வண. சுவாமிமார், சந்நியாசிமார், கன்னிகாஸ்திரிமார், பந்துமித்திரர், அவரால் ஆன்மலாபமடைந்தவர்கள் சகலரும் சுவாமியவர்களின் ஆத்துமஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு விநயமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வதிரி வ. லூக்கேஸ்பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாள் அட்டவணை

**வைகாசிமாதம் 1950**

| | | |
|---|---|---|
| வெ | 12 | அர்ச். நெரேயார், வே. [வே. |
| சனி | 13 | அர்ச். றுபேட் பெலாமினூர், |
| ஞா | 14 | கர்த்தர் உத்தானத்தின் பின்வரும் 5-ம் ஞாயிறு — அர்ச். போனிபாசியார், வே. |
| திங் | 15 | அர்ச். டெலாசால்ஸ்தாபக அருளப்பர், கு. |
| செவ் | 16 | அர்ச். உபால்தப்பர், க. |
| புத | 17 | அர்ச். பாஸ்கால் பயிலோன் |
| வியா | 18 | கர்த்தர் பரலோகத்துக்கு ஆரோகணமான திருநாள் (கடன்) |


சத்தியவேத

# பாதுகாவலன்

1950-ம் ஆண்டு
வைகாசிமாதம் 11-ந் திகதி


## பாத்திமா நாயகியின் இந்திய விஜயம்

இன்னும் பன்னிருதினங்களிலே எமதுஸ்ரீலங்காவந்து சேரவிருக்கின்ற யாத்திரைக்கன்னிகை பாத்திமாநாயகியின் இந்திய சுற்றுப்பிரயாணம் என்றைக்கும் ஞாபகத்தைவிட்டு அகலாத பெரிதும்வெற்றிகரமானதொன்று எனப்புகழ்ந்துபாராட்டப்படுகிறது. அங்கு பற்று நகரிலே பாத்திமாமாதா தங்கியிருந்த அந்தஒருதினமும் பலவருடங்களின்முன்னர் தாம் ஊர்து திருப்பதியிற் செலவிட்ட அந்தப் பெரும்பாக்கியமான — பத்தி அருட்சிநிறைந்த அதேதினத்தைப்போல் இருந்ததாக அந்நகர கத்தோலிக்கபிரமுகர் ஒருவர் எழுதியிருக்கின்றார். மாதா பவனிசெல்லும் ஒவ்வோர்பாதையும் மரியாயின்பாதையாகவும், அங்குமாதா தரிசித்துச்செல்லும் ஒவ்வோர்பதியும் மரியாயின் பதியாகவும் காட்சியளித்து வருகின்றன. மாதா சென்ற சென்ற இடங்களிலெல்லாம் மக்களை எதிர்பாராதவிதமாகப் பதினாயிரக்கணக்கிலே ஈர்ந்து அவர்கள்மனத்திலே தமது பிரசன்னத்தை அழுத்தமாகப் பதித்துவிட்டிருப்பதாக எடுத்துக்கூறப்படுகிறது. மாதாஎழுந்தருளும் இடங்கள்தோறும் தமது அருள் மாரியைப் பொழிந்தவண்ணமே செல்லுகின்றார். அவரின் திருவதனசோபிதத்தைக் கண்ணுற்றுச் சாதிமதபேதமில்லாது எவருமே அவர்பால் கவர்ந்துகொள்ளப்படுகின்றனர். மாதாஎழுந்தருளுகின்றார். அவருக்கென ஓர்சிறியவரவேற்பே ஒழுங்கு செய்யப்படுகிறது. ஆனால், அவர் எழுந்தருளியதும் அச்சிறியவரவேற்பானது பிரமிக்கத்தகுந்த வகையிலே பெருமித ஆடம்பர வரவேற்பாகி மாதாஅங்கு வெற்றிப்பிரவேசஞ் செய்கின்றார். கன்னிகாமடமொன்றில் நடைபெறும் அந்தரங்க வணக்கவழிபாடு பகிரங்கமான ஓர்வழிபாடாகின்றது. சின்னஞ்சிறிய ஊர்வலங்கள் பென்னம்பெரிய ஊர்வலங்களாகின்றன. ஆலயமும் அதன் சுற்றுடல்களும் கொள்ளாதவிதமாய்ச் சமுத்திரம்போலச் சனங்கள் சூழ்ந்துவிடுகிறார்கள். திருச்சுரூபம் ஓர் ஆலயத்தினுள்ளே இருந்தால் என்ன, அதற்குவெளியே இருந்தாலென்ன, அப்போது திவ்விய பூசைவேளையாய் இருந்தாலென்ன, தேவநற்கருணை ஆசீர்வாத வேளையாய் இருந்தாலென்ன சனங்கள் அதன்சந்நிதானத்திலேயே இருக்க ஆசிக்கின்றார்கள். அதனைச் சூழவிருந்து செபஞ்செய்யவும், அதனைத் தொட்டு முத்தமிட்டுக்கொள்ளவும், செபமாலை உத்தரியம்ஆதியனகொண்டு அதனைத்தொட்டுக்கொள்ளவும் ஆவல்கொள்ளுகின்றார்கள். எத்தனையோ இடங்களிலே வருடக்கணக்கில் கோவில்முகம் காணாமலும்,தேவதிரவியானுமானங்கள் பெறாமலும் பாவிகளாகச் சீவித்திருந்தவர்கள் மாதாவின் அருளால் மனமுருகி மனந்திரும்பிக் கிறீஸ்துநாதரையும், அவர் திருமாதாவையும் திரும்பவும் கண்டடைந்திருக்கின்றார்கள். பலர் முதன்முறையாகத் திருச்சுரூபத்தைக்கண்டதே தம்மைஅறியாமலே தமதுஉள்ளத்தில் எழுகின்ற ஞானானந்த பரவசங் காரணமாக மனந்திரும்பி நல்வழிப்படுகின்றார்கள். தக்காநகரிலே பலவருடமாகப் பாவவழியிலே வாழ்க்கைநடத்திவந்த ஓர் பெண் மாதாவின்திருச்சுரூபத்தைத் தரிசித்ததன்மேல் அங்குள்ளகன்னிகாமடஞ் சென்று தான்மனந்திரும்பி எவ்வாறு திரும்பவும் திருச்சபையில்சேர்ந்துகொள்வதென்று கேட்டறியலானாள். மாதாவின் அனுக்கிரகத்தால் ஆங்காங்கு அநேகர் அற்புதமாகச் சரீரஆரோக்கியமும் அடைந்திருப்பதாகச் செய்திகள்பரந்திருக்கின்றன. அவற்றில்எல்லாம் மிகவிசேஷப்பட்டது, பம்பாய்நகரிலே பன்னிருவருடகாலமாக ஓர்முடமாய் இருந்த சங். சிஸ்றர் பியாத்திறிஸ்அவர்கள் மாதாவின்தரிசனைபெற்றதும் எவருமேஅதிசயிக்கும்படியாய்ப் புதுமையாகக் குணமடைந்து தள்ளுநாற்காலியையும் அப்பாற் தள்ளிவிட்டு எவர்துணையுமின்றியே எழுந்துநடந்த சம்பவம் காட்டுத்தீபோல் எங்கும்பரந்துள்ளது. கத்தோலிக்கர் அல்லாதோர்— விசேஷமாக இந்துக்கள் முஸ்லீம்கள்ஆதியோர் மாதாவுக்குக் காண்பிக்கும்பக்திஆசாரவணக்கமும் பாராட்டத்தக்கது. பாத்திமாநாயகி தமதுஇந்திய சுற்றுப்பிரயாணத்தை இனிதே முடித்துக்கொண்டு இம்மாசம் 22-ந்திகதி பங்களூரிலிருந்து ஆகாயவிமானத்திலே இலங்கை வந்துசேரவிருக்கின்றார். ஆகவே மாதாவின்மக்களாகிய நாம் அவர்வரவை ஆவலுடன் எதிர்நோக்கி மனோகரமாக அவரை வரவேற்போமாக!

### அர்ச்சியசிஷ்ட பட்டம்

தனதுகற்பைப் பாதுகாப்பதற்காகத் தன்னுடையபிராணனைத் தியாகஞ் செய்து வேதசாட்சியான முத். மரிய கொறற்றிஅம்மாளுக்குச் சென்ற 7-ந் திகதி ஞாயிறன்று றோமாபுரி அர்ச். பேதுருவானவர் ஆலயத்திலே அர்ச்சியசிஷ்டபட்டஞ்சூட்டப்படலாயிற்று. அடுத்தமுறையாகப் பிறர்சிநேக கன்னியாஸ்திரீமார்சபையை உடனின்றுஅடியிட்டவர்களான முத். வின்சென்ஸா ஜெறோசா, முத். பர்தலோமியா கப்பிற்றுனியோஎனும் இருகன்னிகாரத்தினங்களும் இம்மாசம் 18-ந் திகதியாகிய வருகிறவியாழக்கிழமை ஒருங்கே அர்ச்சியசிஷ்டபட்டஞ் சூட்டப்படுவார்கள்.

## சுதேச வர்த்தமானம்

### கல்லூரி ஆரம்பம்

ஈஸ்றர்விடுமுறைமுடிந்து சம்பத்திரிசியார்கல்லூரி இம்மாசம் 16-ந் திகதியாகிய வருகிறசெவ்வாய்க்கிழமைகாலை மறுபடி ஆரம்பமாகும்.

### சூசையப்பர்கூட்டத் திருநாள்

இத்திருநாள் இம்மாசம் 14-ந் திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை கூட்டக்கோவிலில் வழமைபோலக் கொண்டாடப்படும். முந்திய திரிதின உற்சவங்கள் இன்று ஆரம்பமாகும். திருநாளன்றுகாலை 7 மணிக்குத் திவ்வியபூசையோடும், சாயந்தரம் வேஸ்பர், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்தோடும் திருநாள்முடிவாகும்.

### வின்சேன்ற் டீ போல்தருமசபை

யாழ்ப்பாணம் சென். வின்சென்ற் டீ போல் தருமசபைப் பந்திகளின் முதலாம் கால்வருடப் பொதுக்கூட்டம் இம்மாதம் 21-ந்திகதி ஞாயிறு மாலை 5-30 மணிக்குச் சஞ்சூசையப்பர்கூடச்சாலையில் நடைபெறும். வண. ஜே.பிரான்சிஸ்சுவாமியவர்கள் "கிறீஸ்துவ தருமவேலைகள்" எனும் விஷயமாய் ஓர்சொற்பொழிவாற்றுவார். சகல பந்திகளினதும் ஞானத்தலைவரும், அங்கத்தவர்களும், உபகாரிகளும் தவறாது சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

### இலங்கைத் திருயாத்திரிகர்

பரிசுத்தவருட யாத்திரைநிமித்தமாக றோமாபுரிசென்றிருந்த இருநூற்றுக்குமேற்பட்ட இலங்கைத்திருயாத்திரிகர்கள் பரீஸ்நகரிலிருந்து சென்ற 8-ந்திகதி திங்கட்கிழமை லண்டனிலுள்ள விக்ரோறியா ஸ்ரேஷன்வந்து சேர்ந்திருப்பதாக லண்டனிலிருந்து தந்திசசமாச்சாரம் எட்டியிருக்கிறது. விசேஷப்பட்ட றோமான்கத்தோலிக்க ஆராதனை வழிபாட்டுத் தலங்களைத் தரிசிப்பதற்காகஐரோப்பாவிலே பரக்க நடத்திய தங்கள்சுற்றுப்பிரயாணம் முடிந்ததன்மேல் இலங்கையைநோக்கித் தங்கள்பிரயாணத்தின் கடைசித்தலமாகிய லண்டன்நகரிலே இவர்கள் அன்றுபோய்ச்சேரலாயினர். வயதில் முதிர்ந்த யாத்திரிகர்களில் அதிகப்பற்றுனோர் லண்டனைச்சேர்ந்தபோது களைகொண்டவர்களாய்க் காணப்பட்டனராம். ஏறக்குறைய 50 பேர் சுவிற்சர்லாந்தைத் தரிசிப்பதற்காகப் பரீஸ் நகரிலிருந்து பிரிந்து அங்குசென்றிருக்கின்றார்கள். யாத்திரிகர்கள் லண்டன் நகரில் தங்கியிருக்கும்போது பலநகர்களையும், பிரசித்திபெற்றஇடங்களையும் சுற்றிப் பார்வையிடுவார்கள். இலங்கையின் ஹைகொம்மிஷனராய் அங்கு இருந்துவருகின்ற சேர் ஒலிவர் குணதிலக அவர்கள் இவர்களுக்கென ஓர் விசேஷ தேநீர்உபசாரணை நடத்துவார் பின்னர் யாத்திரிகர்கள் அடுத்த 21 தினங்களுக்கிடையில் மூன்றுகூட்டமாக மூன்றுகப்பல்களில் இலங்கைக்குத்திரும்புவார்கள்.

### இலவச மத்தியானப் போசனம்

தற்போது பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவசமத்தியானப்போசனம் கொடுப்பதற்கென்று ஆளுக்கு 6 சதவீதம் அரசினர் பணம் உதவிவருகின்றனர். இந்த 6 சதத்தை 20 சதமாகக் கூட்டிக்கொடுக்கவேண்டுமென்றுகல்விமந்திரியார் ஆலோசனைகூறியதாகவும், ஆனால், 12 சதமாகக் கூட்டிக்கொடுக்கவே தீர்மானமாயிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அடுத்தவருடமுதலே 12 சதவீதம் கொடுக்கப்படுமெனத் தெரியவருகிறது. பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவச மத்தியானப் போசனம் கொடுப்பதற்கெனச் சென்ற வருடம் 90,71,707 ரூபா செலவு செய்யப்பட்டிருக்கின்றது. இம்முறை வரவுசெலவுத் திட்டத்திலே இதற்கென இரண்டுகோடி ரூபாவரையில் விட உத்தேசிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### மாந்தையிலே லூர்துகெபித் திறப்புவிழா

பழம்பெருமை பெற்றிலங்கும் மாந்தையம்பதியிலே மடுமாதா பெயரால் அழகுற அமைக்கப்பட்டிருக்கும் கெபி நிகழும் வைகாசிமாதம் 19-ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 6-30 மணியளவில் மகாவந். யாழ்ப்பாணமேற்றிராணி ஆண்டவர் அவர்களால் ஆசீர்வதித்துத்திறந்து வைக்கப்படும்.

அத்தருணம் சமுகமளிக்குமாறு உபகாரிகள், மாதாபக்தர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

**நிகழ்ச்சிகள்**

6-30 திறப்பு விழாவும், சற்பிரசாத ஆசீர்வாதமும்

8-30 மரியாயின் இரவு (செபமாலை பிரசங்கம்ஆதியன)

12-00 திவ்வியபூசை.

( நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படும் )

Rev. Fr. John Singarayar
அடம்பன் கட்டளைக்குரு.

### கால்விரலாற் சவரம்

அழுத்துநுவரையைச்சேர்ந்த 46 வயசுடையவரான டபிள்யு. பாபுசிங்கோஎன்பவர் இற்றைக்கு 35 வருடங்களுக்குமுன் ஓர்மரத்திலிருந்து விழுந்தபோது தனது இருகரங்களையும் இழந்துவிட்டார். அதனால்அவர் தனது கைவிரல்களுக்குப்பதில் கால்விரல்களால் சவரக்கத்தியைப்பிடித்து முகச்சவரம் செய்துகொள்ளுகின்றார். கால்விரல்களாலேயே சீப்பைப்பிடித்து தலைசீவிக்கொள்ளுகின்றார். கால்விரல்களால் கல்லைப்பிடித்து இலக்குத்தவறாமல் எறிகின்றாராம். அரசினர் இவருக்கு மாதந்தோறும் பத்துரூபா தருமச்சம்பளம் கொடுத்துவருகின்றனர்.

### றப்பருக்கு உயர்ந்தவிலை

கொழும்புமாக்கெற்றிலே சென்ற திங்கட்கிழமைபிற்பகல் ஷீற்றப்பர் ஒருறாத்தல் 1 ரூபா 15 சதமாக விலைப்படலாயிற்று. 1927-ம்ஆண்டுக்குப் பிறகு இவ்வளவு உயர்ந்தவிலை றப்பருக்குக்கொடுபடவில்லை. அன்று கிறேப்றப்பரும் 1 ரூபா 18 சதமாக விலைபோயிற்று.

### ஆயுர்வேதவைத்தியர்பதிவு

அங்கீகாரம்பெற்ற எந்தவிதமான தாரதாரப்பத்திரத்தையும் கொண்டிராத ஆயுர்வேதவைத்தியர்களைப்பதிவுசெய்வதானது, சுகாதாரமந்திரியாரால் நியமனஞ்செய்யப்பெற்றிருக்கும்பதினைந்து பேரைக்கொண்ட ஓர்கம்மிற்றியால் வருங்காலத்திலே ஆலோசிக்கப்படும். இந்தக்கம்மிற்றியின் தலைவர் திரு. டொனல்ட்உபயசேகர அவர்கள். ஆயுர்வேதவைத்தியர்களைச் சாதாரணவைத்தியர்கள், விசேஷநிபுணர்களென இரு பிரிவாகப் பதிவுசெய்யவேண்டுமெனத் தீர்மானமாயிருக்கிறது.

### களவிலே தங்கம்

புத்தர்களின்விசாகப்பெருநாளன்று 65,000ரூ. பெறுமதியான தங்கத்தகடுகளைக் களவாகக்கொண்டுவந்துகொழும்பில்இறக்க முயற்சித்த ஆஸ்திறேலியர் ஒருவர் சேகுஅதிகாரிகளால் பிரயாணிகளின்ஜெற்றியில் கண்டுபிடிக்கப்படலாயினர். அன்று திங்கட்கிழமை கொழும்புத்துறைமுகத்தில் தங்கிநின்ற கப்பல்களுள் ஒன்றில் பிரயாணஞ் செய்த இந்த ஆஸ்திறேலியர் ஜெற்றியில் தேங்கிநின்ற சனக்கூட்டத்துள் மறைந்துபோக முயன்றார். ஆனால் அவருடையஎடுப்புச் சரிப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "திருயாத்திரைக் கன்னிகையின் அன்பர் கைத்துணை"

பாத்திமா திருநாயகியின் இலங்கைச் சுற்றுப்பிரயாண விஷயமாய் அறியவேண்டிய பல காரியங்களும், அவரை வரவேற்பதுமுதல் பிரியாவிடைவரையில் நடைபெறும் சகலஆராதனை, சடங்குகளும் ஒன்றுக்குப் பின் ஒன்றாக இதிலே ஒழுங்காக வகுத்துத் தரப்பட்டிருக்கின்றன. வரவேற்பு ஆர்ப்பரிப்புகள், வரவேற்புச்செபம், ஒப்புக்கொடுக்கும் செபம், மனுக்குலத்தைப் பாதகாணிக்கையாய் ஒப்புக்கொடுக்குஞ்செபம், சம்மனசானவர் படிப்பித்த செபம், செபமாலைத் திருமணித்தியாலம், பாத்திமா கீதங்கள், சுற்றுப்பிரயாணஒழுங்குமுறை ஆதியபலவும் இதிலே தரப்பட்டிருக்கின்றன. மாதாவின் தரிசனை பெறவிருக்கும் பக்தர்களுக்கெல்லாம் இது ஓர் அரியகைத்துணையாகும். பார்வைக்கு மிக அழகானது.

விலை பிரதி சதம் 15.

தபாற்செலவு சதம் 5.

கிடைக்கும் இடம்:

**T. A. J. மதுரநாயகம்சுவாமியார்**
மேற்றிராசனமாளிகை,
யாழ்ப்பாணம்.

---

தங்கம்அவ்வளவும் பறிமுதல் செய்யப்பட்டது. அவர் கப்பல்சென்று திரும்பவும் பிரயாணமாயினர்.

### புதிய நீதியரசர்

சுப்பிறீங்கோட்டுப் புதிய நீதியரசராகநியமனம்பெற்ற சங். வி. எல். சென்கிளேயர் சுவான்அவர்கள் சென்ற 3-ந் திகதி புதன்கிழமை கொழும்பிலுள்ள பிரதம அப்பீல்கோட்டிலே ஐந்துநீதியரசர்கள்முன்னிலையில் விசுவாசப்பிரமாணஞ்செய்து தம்பதவியைக் கையேற்றார். அத்தருணம் வழக்கறிஞர்களின்போரல் சொலிசிற்றர் ஜெனறலான திரு. ஆர். ஆர். குறொசெற் தம்பையா அவர்கள் புதியநீதியரசரை நல்வரவேற்றுப்பேசியவிடத்து: இலங்கையின் நீதிப்பரிபாலனத்தில் புதியநீதியரசர் ஓர் அணிகலனாகத் திகழ்ந்திருக்கிறாரெனக் கூறிநின்றார். சங். சென்கிளேயர்சுவான் அவர்கள் தற்போதுள்ள சுப்பிறீங்கோட்டு நீதியரசர்களில் மூன்றாவது கத்தோலிக்க நீதியரசராவார். இவ்விதம் ஏககாலத்திலே இலங்கைச் சுப்பிறீங்கோட்டு நீதியரசர்கள் மூவர் கத்தோலிக்கராக இருப்பது முன்னில்லாத ஓர்சம்பவமாகும். தற்போதைய பிரதமநீதியரசர் சங். ஈ. ஜி. பி. ஜயதிலக அவர்களும், சங். எம். எவ். எஸ். பிள்ளை அவர்களுமே ஏனைய இருகத்தோலிக்க நீதியரசர்களாவர்.

## பிரியாவிடை விழா

ஆனியவளைப்பாடசாலையில் கடந்த 14 வருடகாலமாகக் கடமையாற்றிய ஆசிரியை தா. பிலிப்பாச்சி அங்கிருந்து 75 மைலுக்குஅப்பாலுள்ள தண்ணீரூற்றுப் பாடசாலைக்கு மாற்றப்பட்டமையையிட்டு அன்னாருக்குத் தங்கள் நன்றியைக்காட்டுவான்வேண்டி ஆனியவளை வட்டாரவாசிகளால் சாதிமதபேதமின்றிச் சென்றசித்திரைமாதம் 1-ந் திகதி ஓர்பிரிவுபசாரணை நடத்தப்பட்டது. அன்றுபிற்பகல் 6 மணிக்கு ஆசிரியை வாத்திய வரிசைகளுடன் அழைத்துவரப்படுகின்றார். காகோஷமத்தியில் மாலைகள் சூட்டப்பெற்று இதற்கெனச் சித்தஞ்செய்யப்பட்ட உயர்ஆசனத்தில் அமர்கின்றார். வலமிடமாகக் கிராமச்சங்கதலைவர், அங்கத்தினர்கள், ஆசிரியையின் நாயகர் திரு. S. V. தாவீதுப்பிள்ளை, அவர் தமையனார் முதலானோர் ஆசனங்களில் அமர்கின்றனர். பழையபுதியமாணவர் மாணவிகளின் இன்னிசைக்கீதங்கள் மத்தியிலே பலரும் ஆசிரியைஅவர்களின்சேவையைப் புகழ்ந்துபாராட்டி உணர்ச்சிததும்ப உருக்கமான சொற்பொழிவாற்றுகின்றனர். ஆசிரியை எழுந்து தமக்குச்செய்யப்பெற்ற உபசரணைக்காக இருதயபூர்வமான நன்றி தெரிவித்தனர். ஈற்றில் தேநீர்விருந்துடனும், நடனகீதங்களுடனும் பிரியாவிடைவிழா இனிதே முடிபெய்தியது. இவ்வாசிரியை தீர்க்காயுள் பெற்றுச் செல்லுமிடமெல்லாம் சிறப்பெய்துவாராக. சுபம்!

T. A. [illegible]

## அர்ச். தெரேசம்மாள் திருநாள்

சண்டிருப்பாய்

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே சின்னமலராகிய அர்ச். சின்னத்தெரேசம்மாள்பேரால் முதன் முதலாகச் சண்டிருப்பாயிலே கட்டப்பெற்றகோவிலிலே இவ்வர்ச்சியசிஷ்டவளின் திருநாள் அவள் அர்ச்சியசிஷ்டபட்டஞ்சூடிய தினமாகிய வைகாசி மாதம் 25-ந்திகதியை அடுத்துக் கொண்டாடப்படவிருக்கிறது. சென்றவருடம் கோவில் திருப்பணி முற்றுப்பெறாமையால் திருநாட்கொண்டாடமுடியாதபோய் விட்டது. இப்போது திருவிழாக்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன. இம்மாசம் 21-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை திருநாட்பூசை நிறைவேறும்.

J. A. இராசநாயகம் O. M. I.
சுவாமியார்

நல்லூர்.

---

வடஇலங்கைச்

## சங்கீதசபை

யாழ்ப்பாணம்

தாரதரப்பத்திரங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி
அரசினர் மத்திய கலாசாலையில்
நிகழும் 1950-ம் ஆண்டு
மே மாதம் (20-5-50) சனிக்கிழமை
மாலை 4 மணியளவில் நடைபெறும்.
இளைப்பாறிய வித்தியாதிபதியும்,
இச்சபையின்
போஷகராயிருந்தவருமான
**திரு. கே. எஸ். அருணந்தி, M Sc, Dip. Ed. (Lond.)** அவர்கள்
தலைமைவகித்துத் தாரதரப்பத்திரங்களை
வழங்குவார்கள்.
சென்னைச் சர்வகலாசாலையின் இந்திய
சங்கீதபகுதித்தலைவரும் பேராசிரியரும்,
இச்சபைப் பரீட்சகருமான,
**திரு. சாம்பமூர்த்தி B. A., B. L. அவர்கள்**
ஒரு சொற்பொழிவாற்றுவார்கள்.
சித்தியெய்திய பரீட்சார்த்திகள்சிலரால்
இசைவிருந்து அளிக்கப்படும்.
தயவுசெய்து இவ்விழாவிற்குச்
சமூகமளித்துத் தாரதரப்பத்திரத்தைப்
பெற்றுக்கொள்ளுமாறு
கேட்டுக்கொள்ளுகிறேன்.
வரஇயலாத பரீட்சார்த்திகள் தம்
தாரதரப்பத்திரங்களை
இவ்விழாவிற்குப் பின்னர் வித்தியா
கந்தோரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

**S. P. Satcunan**
தலைவர், வ. இ. ச. சபை.

## யாத்திரைக்கன்னிகையின் விஜயம்

பரிசுத்த பாத்திமாநாயகி தமதுசெய்தியை உங்களுக்கும், உலகத்துக்கும் அருளும்படியாகப் பெரிதும் ஆர்வத்துடன் உங்கள்வரவை எதிர்பார்த்திருக்கின்றபின்னர் சொல்லப்படும் மத்தியதானங்களில் ஒன்றுக்கு நீங்கள் யாத்திரைபோக மறந்துபோகாதீர்கள்.

மத்தியதானங்கள் வருமாறு:—

| | | |
|---|---|---|
| அனுராதபுரம் | ஆனி | 2—3 |
| மன்னார் | ,, | 3—4 |
| வவுனியா | ,, | 4—5 |
| தம்பளை | ,, | 5—6 |
| பாத்திமாகிரி (பண்டத்தெருப்பு) | ,, | 6—7 |
| மானிப்பாய் | ,, | 7—8 |
| சின்னமடு | ,, | 8—9 |
| யாழ்ப்பாணம் | ,, | 9—13 |

இந்த அருட்பிரசாத மத்தியதானங்களில் நடுச்சாமப் பூசைகளும், இராமுழுவதும் விழிப்பு ஆராதனைகளும் நடந்தேறும். நீரும் ஓர் திருயாத்திரிகராகச்சென்று வரப்பிரசாதங்களை நிறையப்பெற்றுக் கொள்ளத் தவறாதீர்.

# தங்கப் புத்தகம்

கிறீஸ்தவ இல்லங்களில் குடும்பத்தவர்கள் எல்லாரும்சேர்ந்து நாள்தோறும் செபமாலை செபிக்கப்பண்ணும் நோக்கத்துடன் சிலவருடங்களின்முன் போர்த்துக்காலில் ஓரியக்கம் ஆரம்பமாயிற்று. அது திருச்சபையின் அங்கீகாரம் பெற்றுள்ளது. இவ்வியக்கத்தில்சேர்ந்து குடும்ப செபமாலை செபிக்க வாக்களிப்பவர்களின் நாமங்கள் பாத்திமாகோவிலின் பிரதானபீடத்தில் இதற்கென்று வைக்கப்பட்டிருக்கும் தங்கப்புத்தகம் என்று கூறப்படும் புத்தகத்தில் எழுதப்படும்.

குடும்ப தலைவர் கீழ்க்காணும் பத்திரத்தை நிரப்பித் தமது கையெழுத்துடனும், விலாசத்துடனும், வண. கட்டளைக்குரு, பாத்திமாகிரி, பண்டத்தெருப்பு, சிலோன் என்னும் விலாசத்துக்கு அனுப்பினால், அப்பத்திரங்கள் முறையே போர்த்துக்காலிலுள்ள பாத்திமா ஆலயத்துக்கு அனுப்பப்படும்.

.................................................................ஆகிய நான் என் வீட்டிலுள்ள குடும்பத்தைச்சேர்ந்த அனைவருடனும் ஒவ்வொருநாளும் செபமாலை ஓதிவருவேன் என்றும், சருவேசுரன் எனக்குச் சீவனையும் பெலனையுந் தந்தருளுமட்டும் இப்பத்தி முயற்சியை அனுசரிப்பேனென்றும் வாக்குப்பண்ணுகிறேன்.

கையொப்பம்..........................................
பெயர்..........................
விலாசம்..........................
..............................
..............................
..............................

## அர்ச். அந்தோனியார் கோவில் பெரியகட்டு

பெரியகட்டு, அர்ச். அந்தோனியார் கோவில் வடஇலங்கை முழுவதிலும் பிரஸ்தாபமாக நன்கு அறியப்பட்டுள்ளது. தற்சமயம் இது அழிந்து பாழாகும் நிலைமையில் இருப்பதாலே, புதிய கோவில்ஒன்றைக் கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. வருடந்தோறும் யாத்திரிகர்கள் அதிகரித்துக்கொண்டு வரும் இப்பதியிலே கொண்டாடப்பட்டுவரும் திருநாளின் இருபத்தைந்தாம் ஆண்டு யூபிலிவிழா இவ்வருடம் ஆவணிமாதம் வருகின்றது. அதனால் அர்ச். அந்தோனியாருக்கு மகிமையாக உசிதமான ஓர்சிறந்தகோவிலைக் கட்டியெழுப்ப எமக்கு உதவி செய்யுமாறு அர்ச். அந்தோனியாரின் பக்தர்களுக்கு மனுப்பண்ணுகின்றோம். பழையகோவில் யாத்திரிகர்களுக்கு ஓர் தங்குமடமாய் இருந்துவரும்.

| | | |
|---|---|---|
| **S. P. Alfred** | | ✠ **J. A. Guyomar O. M. I.** |
| Parish Priest, Vavuniya. | 14-2-50 | Bishop of Jaffna. |

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்தவதியான அல்போன்சா சகோதரியின் விசேஷ மன்றாட்டால் கடந்த மார்கழியில் நடைபெற்ற ஆங்கில எஸ். எஸ். சி. பரீட்சையில் நான் எதிர்பாராதவகையில் சித்தியடைந்தேன். நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன். சுத்தவாளர்மூலம் தேவன் மகிமைப்படுத்தப்படுவாராக.

அடம்பன் ஜி. எ. பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தவீடு!

அடுத்தவீடு, என்பது நமது வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒருசாதனமாக இக்காலத்தில் அமைந்துவிட்டது. அடுத்த தெருவில்நிகழ்ந்தது ஒருசிறு நிகழ்ச்சியாக இருந்தாலும் அது எப்படியோ 'அடுத்தவீடு' மூலம் நமது காதுக்கு எட்டிவிடுகிறது. நமது வீட்டு மங்கல, அமங்கலச் செய்திகளும் 'அடுத்தவீடு'மூலம் அம்பலமாகிவிடும். பெண்களுக்கோஎன்றால் 'அடுத்தவீடு' ஒரு கற்பகத்தரு, சுமை தாங்கிஎன்று கூடச் சொல்லலாம்.

எங்கள் கிளப்பிற்கு ஒருபிரமுகர் விஜயஞ்செய்து சொற்பொழிவாற்றுவதாக ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது. "அப்பிரமுகருக்கு வரவேற்புப்பத்திரம் அளிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் வரவேற்புப்பத்திரம் எழுதத்தான் ஆள்அகப்படவில்லை. அந்தச் சமயத்தில் 'அடுத்தவீட்டு'க் குப்புசாமி ஓடிவந்து 'என்னசேர்! சங்கடப்படுகிறீர்கள். ஆள் தான் இருக்கிறாரே. அவர்தான் கதை எழுதுபவராயிற்றே; அவரைக் கொண்டு ஒருபத்திரம் எழுதிக்கொண்டால்......'' என்றார். அதன்பின் பார்க்கவேண்டுமா! 'ஏன் இதைமுன் கூட்டியே சொல்லியிருக்கக்கூடாதா?' என்று நண்பர்கள் ஒரேமுகமாக என்னைக் கடிந்துகொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்.

நான்ஒருநாள் ஆபீசிலிருந்துதிரும்பி வந்ததும் என்மனைவி காப்பியைக் கொண்டுவந்து தந்துவிட்டுக் 'கேட்டீர்களா சமாச்சாரத்தை' என்றாள்.

'எதைச்சொல்லுகிறாய்! சொன்னால்தானே தெரியும்' என்றேன்நான்.

'அடுத்ததெருவிலிருந்த பெண் ஒருத்தி புருஷனுடன் கோபித்துக் கொண்டு பிறந்தகத்திற்கு வந்துவிட்ட

**********************

சே. நடராசா

**********************

தாம். திரும்பிப் போவதில்லையென்று பிடிவாதமாக இருந்தாம். ஆனால் இன்று மத்தியானம் அவள் புருஷன் வந்து அழைத்ததும் ஒருவருக்கும் சொல்லாமல் அவனுடன் போய்விட்டாளாம்'

'இது சகசந்தானே! அது கிடக்க அவள் உன் சிநேகிதையா? எப்படி உனக்கு இந்தச்சமாச்சாரம் தெரிந்தது?' என்றேன்.

'உங்களுக்கு எதற்கெடுத்தாலும் இந்தப் பேச்சுத்தான்; 'அடுத்தவீட்டு' மாமி சொன்னாள்' என்றாள்.

இதுமட்டுமா? அன்று ஞாயிற்றுக் கிழமைமாலை மூன்றுமணிஇருக்கும். துணிகளுக்குச் 'சோப்' போடுவதற்குக் கிணற்றடிக்குச்சென்ற மனைவி கையில் புத்தப்புதிய பங்களூர்ப் பட்டுப் புடவையுடன் திரும்பிவந்தாள்.

என்ன இந்தச்சேலையை 'அடுத்தவீட்டு' மாமி வாங்கிவந்தாளாம். பணமுடையால் இதை என்னை வாங்கும்படி வற்புறுத்துகிறாள். சேலை திறமானதுதான். விலைதான் கொஞ்சம் அதிகம். அப்படிப் பார்த்தால் நல்ல பண்டம் வாங்கமுடியுமா' என்றாள்.

என் அதிர்ச்சியைச் சிறிது தீர்க்கும் முறையில் 'சேலை என்னவிலையாம்' என்றேன்.

'அதிகமில்லை. நூறுரூபா தானாம்!' என்றாள்.

என்மனைவி ஒருபொருளில் கண் வைத்துவிட்டால் அதற்கு 'அப்பீலே' கிடையாது. எனக்குவந்த ஆத்திரத்தில் அந்த 'அடுத்தவீட்டை'ச் சுட்டுப் பொசுக்கிவிடலாமா? என்றுகூட நினைத்தேன். மனிதனுக்கு இப்படி ஒரு பணநெருக்கடியை உண்டாக்கிவிடலாமா? 'அடுத்தவீடு?'

'பம்பாய் பாஷன்' உங்களுக்குத் தெரியுமா என்றாள் என்மனைவி ஒருநாள்.

'எனக்குத்தெரியாது; தெரிந்தால் சொல்லுங்கள்; நான்கேட்டுக்கொண்டிருக்கிறேன். அது சரி, உனக்கு எப்படி இது தெரியவந்தது?'

'அடுத்தவீட்டு' அம்புசம் சொன்னாள்!

'அடுத்தவீடு' தான் இருக்கிறதே, மனிதனின் கழுத்தை அறுப்பதற்கு!'

'உங்கள் திருவாயிலே இருந்துவரும் திருச்சொற்களைக் கொஞ்சம் கவனித்துச்சொல்லுங்கள். அடுத்தவீட்டு அம்புசம் பக்கத்துவீட்டுக்குப் போனாளாம். அங்கே பம்பாயிலிருந்து புதிதாய் ஒரு பெண் வந்திருந்தாளாம்......'

'அடுத்தவீட்டு அம்புசம் அடுத்த வீட்டுக்குப்போனாள். அங்கே ஒரு பெண் வந்திருந்தாள், அப்புறம்?'

'உங்களுக்குக் கேலிதான்!'

'சும்மா சொல்லு!'

'கைகளிலே பம்பாய் வளையல்களும், கழுத்திலே குருவிக்காரிமாதிரிப் பாலை மணிகளும், மாடுகளின்கழுத்தில் கட்டுகிறமாதிரிப் பெரியஉருவில் பீங்கான் மாலைகளும்அணிந்திருந்தாளாம் அவள்! அதுதான் பம்பாய் பாஷனும்!'

'அடுத்தவீடு' இருந்ததினால்தானே என்மனைவிக்குப் 'பம்பாய் பாஷன்' தெரியவந்தது.

ஒருநாள்மாலை ஐந்துமணியிருக்கும். ஆபீசிலிருந்து வீட்டுக்குவந்தேன். வீட்டின்வெளிக்கதவு பூட்டப்பட்டிருந்தது. நான் தயங்கிக்கொண்டே மனைவி எங்கே போயிருப்பாள்என்று எண்ணிக் கொண்டிருக்கும்போது, அடுத்தவீட்டுப்பையன் என்னிடம் சாவியைக் கொண்டுவந்து தந்துவிட்டு 'மாமி' கடைத்தெருவுக்குப் போயிருக்கிறாள்; சாவியை உங்களிடம் கொடுக்கச்சொன்னாள் மாமா' என்றான்.

'அடுத்த வீடு' ஒன்று இல்லாவிட்டால் இப்படித் துணிந்து கடைத்தெருவுக்குப் புறப்பட்டிருப்பாளா மனைவி?

'குழந்தையைக் கொஞ்சம் பார்த்துக்கொள்ளுகிறீர்களா? அடுத்தவீட்டிற்குப் போய்விட்டு ஒருநொடியில் வருகிறேன்' என்று மனைவி வம்பளக்கப் போவதற்கும்—இல்லை—குழந்தையைப் பராமரிக்க எங்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திவிட்டு அவள் தப்பிவிடுவதற்கும் 'அடுத்தவீடு' தான் காரணம்!

ஒருமுறை என்வீடுதேடி ஒருபுது மனிதர் வந்தார். 'வாருங்கள், இருங்கள்' என்று கூறிவிட்டு 'வந்தவிசேஷமென்ன?' என்று அவரை விசாரித்தேன். அவர் 'ஒன்றுமில்லை; கோவில் அபிஷேகம் ஒன்று நடத்தப்போகிறோம்; அதற்கு நிதிசேகரிக்கிறோம்; உங்கள் உதாரகுணத்தைப்பற்றி 'அடுத்தவீட்டு' அன்பர்' சொன்னார்... ...என்று வார்த்தையை முடிக்காமலே சிரித்தார்.

இதன்பிறகு ஐந்தோ பத்தோ அவர் நிதிக்குக் கொடுக்காமலிருக்க முடிகிறதா? சிலவிஷயங்களில் 'அடுத்தவீடு' நமதுதலையை மழுங்க மொட்டையடித்தும்விடுகிறது.

சிலர் அடுத்தவீட்டைப் பார்த்துக் கொப்பியடிப்பதும் உண்டு. அடுத்த வீட்டுக்காரன் 'ரேடியோ' வாங்கினால் இவனும் வாங்குவான். அவன் வெளியூர்போனால் இவனும் குடும்பசகிதம் வெளியூர் போய்விடுவான் கல்விப்பரீட்சைகளில் நாம்கொப்பியடித்துக் கஷ்டப்பட்டது போதாதென்று வாழ்க்கைப் பரீட்சையிலும் நம்மைக் கொப்பியடிக்கப்பண்ணுவது 'அடுத்தவீடு' தான்!

சில 'பிளாய்க்மாக்கெற்' முதலாளிகள் 'அடுத்தவீடு'களை ரொம்பவும் உபயோகப்படுத்திக் கொள்வார்கள். கள்ளச்சாமான்களை அதிகாரிகளுக்குத் தெரியாமல் ஒளித்துவைப்பதில் அடுத்தவீடு பெரியஉதவி புரிந்திருக்கிறது.

சில சண்டைக்காரப் பெண்களுக்கு 'அடுத்தவீடு' என ஒன்று இருப்பதினாலேயே தங்கள் 'வாய்வரிசை'யைக் காண்பிக்க முடிகிறது. விடிந்தெழுந்ததும் 'அடுத்தவீட்டு' அம்மாளோடு ஒரு சின்னக் 'குஸ்தி' போடாவிட்டால் சிலபெண்களுக்கு [illegible] ருக்கும். சில யுவன, யுவதிகளை மணமகன் மணமகள் ஆக்கிவிடுவதும் இந்த 'அடுத்தவீடு'தான்! மாமிமாருக்கோ அல்லது மருமகள்மாருக்கோ ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைச் சொல்லி ஆறுதலடைவதும் 'அடுத்தவீட்டி'ல்தான்!

'மொத்தத்தில் இந்த 'அடுத்தவீடு'ஒன்று இருப்பதனாற்றானே நான் எவ்வளவோ ஆறுதலாக இருக்கிறேன்' என்கிறாள் மனைவி. 'எனக்கென்னவோ இந்த அடுத்த வீடொன்றிருப்பது அடிக்கடி பணநெருக்கடியை ஏற்படுத்தத்தான்' என்று நான் எண்ணுகிறேன்.

'உங்களுக்கு அடுத்த வீட்டைப்பற்றிப் புகார் சொல்லாவிட்டால் தூக்கம் வாராதே!' என்றாள் என் இல்லாள்.

(வீ. கே.)

---

திரிகோணமலை, பாலையூற்று பரிசுத்த லூர்துநாயகியின்

## கெபிஸ்தாபக தங்கயூபிலி மகோற்சவம் 1900—1950.

1900-ம் ஆண்டு ஐப்பசிமாதத்தில் மட்டக்களப்பிலே கலரா என்னும் கொடியவிஷபேதிநோய் உண்டானது. அக்காலத்திலே திரிகோணமலை, அர்ச். மரியநாயகி ஆலயத்தின் கட்டளைக்குரவராயிருந்த வண. F. X. ஹெம்பேக்கர் S. J. சுவாமியவர்கள் அப்போது மேற்றிராசன அதிகாரியாயிருந்த மிகவண. சாள்ஸ்றேயர் S. J. சுவாமியவர்களின் அனுமதிபெற்றுத் திரிகோணமலையில் அந்நோய் பரவாதிருந்தால் லூர்துஅன்னையின் பெயரால் ஓர் கெபி அமைப்பதாக நேர்த்திசெய்து கொண்டார். அவரது வேண்டுதலுக்குத் தேவதாயாரும் செவிசாய்த்தாள். நேர்த்திப்பிரகாரம் தேவதாயாரின் கெபிஸ்தாபக 50-ம் வருட தங்கயூபிலி மகோற்சவம் வருகிற 4-6-50-இல் கொண்டாடப்படும். மக்களை ஆசீர்பெற அன்புடன் அழைக்கின்றாள் பரிசுத்த லூர்துஅன்னை

ரீ. ஆறன்ட்ஸ்
கட்டளைக்குரு

பரிசுத்த வியாகுலமாதா கோயில்
சின்னக்கடை
திரிகோணமலை. 2-5-50.

---

## அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்திருநாள்

சில்லாலைப்பதியிலே அர்ச். சூசையப்பரின் அடைக்கலத்திருநாள் சென்ற சித்திரை 30-ந்திகதி ஞாயிறுவாரம இவ்வூர்இளைஞர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படலாயிற்று. முதனாள் சனிவாரம் ஆலயத்தின் உள்ளும்புறமும் அழகுற்றுச் சந்திரபிம்பம்போற் சொலிக்க, ஒலிபரப்பியுடன் ஆராதனைகள் ஆரம்பமாயின. செபமாலைமுடிந்ததும் கட்டளைக்குரவர் வண. வேந்தர்கோன் சுவாமியவர்கள் அர்ச். சூசையப்பர்பேரில் அரியதோர் பிரசங்கஞ் செய்து மாலையாராதனை பாடிமுடிந்ததும் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் ஆரம்பமாயிற்று. வாத்தியங்கள் இசைக்க, மணிகள்ஆர்ப்பரிக்க, பக்தர் குழாம் எரிகின்றமெழுகுவர்த்திகள் காத்தேந்தியவண்ணம் ஒலிபரப்பிமூலம் செபமாலைஓதிக்கொண்டு அணிவகுத்து மேற்குவீதிவழியாகச்செல்லச் சுற்றுப்பிரகாரம் சிறப்பாகநடைபெற்று ஆலயத்தையடைந்ததும் திவ்விய சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்படலாயிற்று. மறுநாட்காலை கட்டளைக்குரவர் நிறைவேற்றிய பாடற்பூசையுடன் திருநாள் இனிதே நிறைவெய்திற்று.

ஏ. எம். நாயகம்

---

— குருமார், குருத்துவமாணவர்கள், சந்நியாசர், கன்னிகாஸ்திரிமாராய் ஸ்பானிய உள்நாட்டுயுத்தத்தின்போது கொலையுண்ட ஏழாயிரம்பேரையும் மகிமைப்படுத்துமாறு சமீபத்திலே வல்லாடொலிட்நகரில் நடந்தேறிய "தேசீய ஆசாரவணக்ககால" ஆரம்பவிழாவிற்கு அநேக ஸ்பானிய அதிமேற்றிராணிமாரும், மேற்றிராணிமாரும் சமுகமளித்திருந்தார்கள்.

---

## கம்யூனிஸ விலக்குச்சட்டம்

ஆஸ்திரேலியாவிலே கம்யூனிஸ்தகட்சியை ஓர்சட்டவிரோதமான கட்சியாக்கி அதனைக்கலைப்பதற்கும், அக்கட்சியின்நிதிகளைப் பறிமுதல்செய்வதற்குமான புதியசட்டம் ஒன்றை அத்தேச பாராளுமன்றத்திலே ஆஸ்திரேலியபிரதமர் ஆர். மென்சீஸ் சமர்ப்பித்திருக்கின்றார். இச்சட்டம் அரங்கேறுமிடத்து, கம்யூனிஸ்தகட்சிக்கு அப்பீல்செய்யும்உரிமைகிடையாது. அதன் நிதிகளில் செல்லவேண்டியதொகைக்கு மேலதிகமாக இருக்கும்பணம் அரசாங்கபணத்துடன் சேர்க்கப்படும். சட்டவிரோதமானவையென்றுபிரசித்தஞ்செய்யப்பட்ட ஸ்தாபனங்களின் அதிகாரிகளும், அங்கத்தினர்களும் தங்கள் நடவடிக்கைகளை நிறுத்தாவிடின் சிறைத்தண்டனை விதிக்கப்படுவார்கள். நாட்டுக்கும், சமாதானத்துக்கும் விரோதிகளாய்உள்ளவர்கள் தங்களதுநாசத்திட்டங்களுக்குமிகுந்த உதவியளிக்கக்கூடிய பதவிகளைவகிக்க எந்தத்தொழிற்சாலையிலும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

### 32 வருட நித்திரை

சுவீடன்நாட்டைச்சேர்ந்த ஏக்ஞ் எனுமிடத்திலே தொடர்ந்து 32 வருடகாலமாக ஒரேநித்திரையாய்க்கிடந்த கறோலின் கரிசென்எனும்பெண் சமீபத்திலே தனது 88-ம்வயதில் மரணமாயினாள். 1876-ம் ஆண்டு 13 வயசுடையவளாய் இருந்தபோது இவள் நித்திரையாகவிழ்ந்தாள். ஏதோ களைகொண்டுஅயர்ந்துபோய்க் கிடக்கிறாளெனத் தாய்நினைந்து அவளை வழமைபோலப் படுக்கையில்கிடத்தினாள். ஆனால் இவள் 1908-ம் ஆண்டுவரையில் நித்திரைவிட்டு எழவேயில்லை. ஆனால், இவள் என்றைக்கும் நல்லசுகத்துடன் சீவித்துவந்திருக்கிறாள்.

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

எனதுமகனுக்குவந்த சுகவீனம் பிரபல ஆங்கில, தமிழ்வைத்தியர்களிடம் சிகிச்சைபெற்றும் குணமுறாதுபோக, தோலகட்டி ஆச்சிரமசிரேஷ்டரது ஆலோசனையின்பேரில், நாள்தோறும் செபமாலையின் ஐந்துகாரணிக்கங்களையும் குடும்பமாய்க் கைவிரித்துச் சொல்லிவந்ததால் குணப்பட்டுவிட்டது. செபமாலைஇராக்கினியின்நாமம் புகழப்படுவதாக.

S. K. P.

---

## நேர்த்தியின் பூர்த்தி

அர்ச். ஆரோக்கியநாதரை வேண்டிக்கொண்டதால் நான்கேட்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். நேர்த்தியின்படி பிரசுரிக்கிறேன்.

யாழ்ப்பாணம் M. M. S.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகத்திற்கு அழகு

அகத்திற்குச் சிறப்பைத்தருகிறது அன்பு. முகத்திற்குச் சிறப்பைத்தருகிறது சிரிப்பு. இதிலும் எத்தனையோ வகையுண்டு. அவற்றில் விசேஷப்பட்டது புன்சிரிப்பேயாகும். சதாபுன்சிரிப்புடன் திகழும்முகத்திற்கு அலாதியான ஒரு அழகு உண்டு. வதனத்திற்கு ஓர்இனிய சூழ்நிலையை உண்டாக்குகிறது புன்னகை. முகத்திலே இயற்கையான வெறும் அழகு மாத்திரம் இருந்தால் போதாது. அது சிரிப்பின் செழிப்பையும்பெற்றுத் திகழவேண்டும். மேலும் சதாபுன்முறுவல் ஒளிரும்முகத்தை யாரும்விரும்புவார்கள். பலரின்அன்பும் அதற்குக்கிட்டும். ஆகவே சிரிப்பின்மூலம் அன்பையும், சாந்தியையும் எங்கும்பரப்பலாம். இன்னும்சிரிப்பதினால் தேகத்திற்குப் பலநன்மைகள் ஏற்படுகின்றனவென்று ஆராய்ச்சியாளர்கள் கூறியிருக்கின்றார்கள். 'சிரித்தால் கொழுக்கலாம்' என்று ஒருவசனமே இருக்கிறது. வாழ்க்கையில் எத்தனையோ கஷ்ட நஷ்டங்கள் குறுக்கிடுகின்றன. அவைகளை எல்லாம் எதிர்த்துச்சமாளிக்க நமக்கு உதவும் தோழர் சிரிப்புதான். கஷ்டகாலம் வந்துவிட்டதேயென்று மூக்கால்அழுவதில் பிரயோசனமில்லை. அந்நிலையிலும்சிரித்துச் சிரமத்தையெல்லாம் மாற்றிக்கொள்ளும்பண்பை நாம்வளர்த்துக்கொள்ளவேண்டும்.

புன்னகைக்கென்று தனித்தினங்களை அதாவது சிநேக—பட்ச பதினைந்து தினங்களைப் பிராஞ்சுதேசம் கொண்டாடத்தொடங்கியிருக்கிறது. இம் மாதம் 1-ந்திகதியன்று இது ஆரம்பமாகிவிட்டது. இந்தப்பதினைந்துதினங்களிலும் பிராஞ்சியமக்கள் புன்னகை பூத்த முகத்துடன் காட்சிஅளிப்பார்களாம். மனதிலே எத்தகைய சிந்தனைகள் வந்துகொண்டிருந்தாலுஞ்சரி முகத்தில் புன்சிரிப்பு இருந்தாகவேண்டும். இவ்விதம்பிராஞ்சியமக்கள் புன்னகைத்தினங்களைக் கொண்டாட வேண்டிய காரணமென்ன? சென்ற இரண்டாவது உலகயுத்தத்துக்குப்பின் அவர்கள் சுயநலமிகளாகமாறிவிட்டார்கள். அவர்கள் கடோபாஷையை உபயோகிக்கத் தொடங்கிவிட்டனரென்றும், பிராஞ்சிய மரியாதையான சுபாவம் மீண்டும் ஏற்படவேண்டுமென்றும் பிராஞ்சியபத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. இதற்காகவே புன்னகைத்தினங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். புன்னகையின்மூலம் மக்களின் மனப்போக்கைமாற்றிச் சமூகசூழ்நிலையை ஏற்படுத்த இம்முறை பெரிதும் உபயோகமானது. ஆனால் வாழ்க்கையில் நாம் புன்னகைக்கென்று சிலதினங்களை ஒதுக்கிவைத்துப் புன்னகைசெய்வதால் அது நீடித்திருக்கமாட்டாது. எப்பொழுதுமே முகத்தில் புன்முறுவல் விளையாடவேண்டும். வெறும் உதட்டுச்சிரிப்பு முழுநன்மையைத் தந்துவிடாது. ஆதலால்உள்ளம்உவந்து சிரிக்கவேண்டும். மனதிற்கும், தேகத்திற்கும் புஷ்டிதருவது சிரிப்பு. ஆகவே, சிரியுங்கள்.

சிரிப்புக்குப் பயிற்சிதேவையா? ஆம் என்று கருதிப்போலும் ஒருபாடசாலையிலே சிரிப்பையும் கட்டாயப்பாடத்திட்டத்தில் சேர்த்திருக்கிறார்கள். இங்கிலாந்திலே கென்ற்நகரிலுள்ள ஓர்பாடசாலையில் யோகாப்பியாசமும், சிரிப்பும் பாடத்திட்டத்தில் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளன. அதிலேபயிலும் 48 மாணவர்களும் காலைஉணவுக்குப்பின் சிலநிமிஷங்களைச் சிரிப்பதில் கழிக்கின்றனராம். வாய்விட்டு நன்றாகச்சிரிப்பது உடலிலுள்ள கரிவிஷத்தை அப்புறப்படுத்துகிறதென அப்பாடசாலையின் தலைவர் கூறுகிறார். சிரிப்புப்பயிற்சி முடிந்ததும் மாணவர்கள் யோகாப்பியாசம் செய்கின்றார்கள்.

சிரிப்புசம்பந்தமான ஒருவியாதியும் இருக்கிறது. சிலமாசங்களுக்கு முன் இந்தவியாதியினால் பீடிக்கப்பட்ட ஒரு

## "பாத்திமாமாதாவும் செபமாலையும்"

பாத்திமா செபமாலை மாதா இலங்கையைத் தரிசிக்கப்போகும் இச்சந்தர்ப்பத்திலே "பாத்திமாமாதாவும், செபமாலையும்" எனும் இவ்வரியபுத்தகத்தைக் கத்தோலிக்க தமிழ்மக்கள் ஒவ்வொருவரும், ஒவ்வோர் குடும்பத்தினரும்வைத்திருந்து, மாதாவின்வருகைக்கு ஆயத்தஞ் செய்துவரவேண்டும். பாத்திமா அற்புதங்களின்வரலாறு, செபமாலைத்தியானங்கள், மாதாவின் வாக்குத்தத்தங்கள், ஐந்து முதற்சனிக்கிழமைபத்தி அனுசரிக்கும்விதம், மாதாவின் மாசில்லாத இருதயத்துக்கு நிந்தைப்பரிகார நவநாள் ஆதியபலவும் இதிலே அடங்கியுள்ளன. பார்வைக்கு அழகான புத்தகம்.

விலை பிரதிசம்த 25

தபாற்செலவு சதம் 10

பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T. A. J. மதுரநாயம்சுவாமியார்
மேற்றிராசனமாளிகை,
யாழ்ப்பாணம்.

---

மாலுமியைப்பற்றி ரசமான தகவல் ஒன்று பத்திரிகையில் வெளியாயிற்று. சிட்னிநகர ஆஸ்பத்திரியிலே சிகிச்சை பெறுவதற்காக அம்மாலுமி வந்தார். அடிக்கடி அவர் சிரித்துக்கொண்டேயிருந்தார். காரணம் உண்டோ இல்லையோ, சதாசிரிப்பதே அவர்வேலையாகிவிட்டது. இம்மாதிரி அடிக்கடி சிரிக்கவைக்கும்வியாதி ஒரு அபூர்வமானவியாதியாகும். இந்தநோய் இரத்தஓட்டத்தையே பாதித்துவிடுமாம். இதற்குமருந்து கண்டுபிடிக்கப்படவில்லையாம். ஆனால், இந்தநோய் உயிருக்குஆபத்தைஉண்டாக்குவதில்லையெனக் கூறுகிறார்கள். சிரிப்புவியாதியினால் பாதிக்கப்பட்டமாலுமி சதா சிரித்துக்கொண்டு மகிழ்ச்சிகரமாக இருக்கிறாராம். அந்தஆஸ்பத்திரியிலுள்ள மற்றவியாதிக்காரர்களையும் அவர் சிரிக்கவைத்துவிடுகிறாராம்.

## நாளுசங்கதிகள்

— வருகாலத்திலே தாங்கியுத்தத்தின் போக்குமுழுவதையும் மாற்றிவிடவல்லதான தாங்கிப்பரிநாச ஆயுதம்ஒன்றை அமெரிக்கவாசு கண்டுபிடித்துச் செய்துவருவதாக அமெரிக்க தரைப்படைத்தளபதிகளின் பிரதமதலைவரான ஜெனறல் லோட்டன் கொலின்ஸ் தெரிவிக்கின்றார். பெருந்தொகையான தாங்கிப்படையைக்கொண்ட எந்தஒருநாட்டையும் இந்தநவீன ஆயுதங்கொண்டு தோற்கடித்து விடலாமாம்.

— பிராஞ்சிய ஆகாயப்பிரயாண சேவையிலே பேர்பெற்ற பிரதமவிமானியும், நியூயோக்—பரீஸ் நகர்களுக்கிடையே ஓர்ஆகாயவிமானத்தில் முன்னில்லாத தீவிரகெதியாய் 8 மணித்தியாலம் 31 நிமிஷத்தில் பறந்துசென்று உலகப்பிரசித்திபெற்றவருமான எம். பேர்கோடியே அவர்கள் கப்புச்சின்சந்நியாசசபையிலே சேர ஆயத்தப்படுகின்றார்.

— யப்பானிலே யுத்தகால பிரதமராயிருந்த டொஜோவும், அவருடன் சேர்ந்தவர்களும் தங்கள் கடைசி நாட்களைச் செலவிட்டதும், டோக்கியோ நகரிலுள்ளதுமான சுதாமோ சிறைச்சாலையிலே மேலும் எட்டுக் கைதிகள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றிருக்கின்றார்கள். இவர்களும், எலவே மனந்திரும்பியவர்களுமாகத் தற்போது அச்சிறைச்சாலையில் 32 கத்தோலிக்கர் இருந்துவருகின்றார்கள்.

— கருங்கடலுக்குள் பிரவேசிக்கும் வழியான டாடினெல்ஸ் துறைமுகத்திலே ரூஷிய-துருக்கி ஆதிக்கத்தைப் பிரயோகிக்க முன்வரும்படி கேட்டு ரூஷிய சோவியற்அரசு தயாரித்த திட்டத்தைத் துருக்கிய அரசு இறுதிமுடிவாக நிராகரித்துவிட்டதென அமெரிக்க ஐக்கியதேசத்திலே துருக்கிய ஸ்தானிகராய் இருந்துவருகின்ற திரு. பெரிடன் ஏர்கின் சென்ற 27-ந் திகதி தெரிவித்திருக்கின்றார்.

— தற்போது இங்கிலாந்து, ஸ்கொத்லாந்து, வடஅயர்லாந்து ஆதிய மூன்று தேசங்களுக்குமாக ஒரேஅரசாங்கமே இருந்துவருகிறது. தற்போது ஸ்கொத்லாந்துக்கு வேறான அரசாங்கம் கொடுபடவேண்டுமெனக்கேட்டுப் 10 லட்சம் பேருக்குமேற்பட்ட ஸ்கொத்லாந்தரின் கையொப்பத்தைக்கொண்ட ஓர் மனுப்பத்திரத்துடன் 17 ஸ்கொத்லாந்தர் ஓர் தூதுக்கோஷ்டியாகச் சமீபத்திலே லண்டன்நகர் செல்லவிருக்கின்றார்கள்.

— தென்னாபிரிக்காவிலே ஒறேஞ்ச் சுவாதீனநாட்டைச்சேர்ந்த றெட்போட்நகரில் வசிக்கும் திரு. டிறெயர் என்பவரும், அவர் பாரியாரும் இற்றைக்கு 78 வருடங்களுக்குமுன்னே விவாகஞ்செய்து கொண்டார்கள். இருவருக்குந் தற்போது முறையே 97 வயதும், 96 வயதும் நடக்கின்றது. இவர்கள் தற்போது தங்கள்குடும்பத்தின் ஐந்தாவது தலைமுறையை அதாவது தங்கள் கொள்ளுப்பேரன் பேத்திகளைக் காணும் பாக்கியத்தைப் பெற்றிருக்கின்றார்கள்.

— ஸ்பானியதேச உள்நாட்டு யுத்தத்தின்போது பொதுஉடைமைக்காரரால் கொலைசெய்யப்பட்ட சுமார் 7,000 குருமார், சந்நியாசர், கன்னிகாஸ்திரிமாரின் நாமங்களைக்கொண்ட புத்தகம்ஒன்று வல்லாடொலிட்நகரிலுள்ள பிரதான கோவிலிலே வேதசாட்சிகளின் அடுத்தாரில் வைக்கப்பட்டிருக்கின்றது. "திருச்சபையின் மகிமைக்காக அத்தனை அநேகவேதசாட்சிகளை நமதுகாலத்தில் வேறெந்தச் சாதிசனமும் உதவவில்லை" என்று அத்தருணம் ஜெனறல் பிறுங்கோ ஓர் வாழ்த்துச் செய்தி அனுப்பிவைத்தார்.

— அயர்லாந்திலிருந்து தமதுகுடும்பத்துடன் 1928-ம் ஆண்டு ஆஸ்திறேலியாவிற் போய்க் குடியேறிய திரு. டபிள்யூ. கிறீட் என்பவரின் எட்டுப்பிள்ளைகளும் குருமார், கன்னிகாஸ்திரிமாராகியிருக்கின்றார்கள். புத்திரர் இருவர் எலவே குருமாராகிவிட்டனர். மற்றொருவர் இன்னும் இருவருடத்தில் குருப்பட்டம் பெறவிருக்கின்றார். புத்திரிகள் ஐவரும் கன்னிகாஸ்திரிமாராய் இருக்கின்றார்கள்.

— சென்ற நத்தால்திருநாளுக்கு முதனாள் பரிசுத்தவருடம் ஆரம்பமானதுமுதல் பரிசுத்தவருடப்பலன்களை அடைந்துகொள்வதற்காக வாரந்தோறும் ஜேர்மனி 500 பேர்களைக் கொண்ட யாத்திரைறெயின்ஒன்றைக் கிரமமாக றோமாபுரிக்கு அனுப்பிவைத்துக்கொண்டிருக்கிறது. இதுவரை 6,000 பேருக்குமேற்பட்ட ஜேர்மன் மக்கள் றோமாபுரிக்கு யாத்திரை செய்திருக்கின்றார்கள்.

— முன்னர் யப்பானிய சுப்பிறீங் கோட்டுப் பிரதம நீதியரசராக விளங்கியிருந்தவரான திரு. எம். புச்சிரடாகிகோ அவர்கள் மனந்திரும்பி டோக்கியோநகர கத்தோலிக்க சர்வகலாசாலைப் பேராசிரியரான யேசுசபையைச்சேர்ந்த வண. ஹியுவேர்ஸ்சுவாமியாரால் சென்றபங்குனிமாதம் 3-ந் திகதி ஞானதீட்சையருளப்பெற்றிருக்கின்றார். இவர்பாரியாரும், புதல்வியும் ஏற்கனவே கத்தோலிக்கராகிவிட்டார்கள்.

—மகாயுத்தத்துக்குப்பின் முதல் றோமாபுரியைத் தரிசிக்கும் முதலாவது யப்பானிய மேற்றிராணியார் பரிசுத்த வருடயாத்திரை நிமித்தமாக அங்கு வந்து சேர்ந்திருப்பதாகச் சென்ற ஞாயிற்றுக்கிழமை தந்திசமாச்சாரம் எட்டியிருக்கிறது. இவர் ஒசாக்காநகர் மேற்றிராணியாரான 47 வயதுடைய போல்யோஷிகொறோ டகூச்சி ஆண்டவரே.

## பாஸ்குத் திருநாளுக்குப்பின் 5-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு

(அரு. 16: 23—30)

அக்காலத்தில் யேசுநாதர் சீஷர்களை நோக்கிச்சொன்னதாவது: என்நாமத்தினால் பிதாவை ஏதாகிலும் கேட்பீர்களேயானால் அதை உங்களுக்குத் தந்தருளுவாரென்று மெய்யாகவே, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். இற்றைவரையில் நீங்கள் என்நாமத்தினால் ஒன்றையும் கேட்கவில்லை. கேளுங்கள், உங்கள் சந்தோஷம் பூரணமாகும்படி பெற்றுக்கொள்வீர்கள். இவைகளை உங்களுக்கு உவமைகளாகச் சொன்னேன். இனி நான் உங்களோடு உவமைகளாய்ப்பேசாமல், என் பிதாவைக்குறித்து வெளிப்படையாய் உங்களுக்கு அறிவிக்கும்நேரம்வருகிறது. அந்நாளில் என்நாமத்தினால் கேட்பீர்கள். ஆயினும் நான் உங்களுக்காகப் பிதாவை மன்றாடுவேன் என்று உங்களுக்குச்சொல்லுகிறதில்லை. ஏனெனில், நீங்கள் என்னைச் சிநேகித்ததினாலும், சர்வேசுரனிடத்தினின்று நான் புறப்பட்டேன்என்று விசுவசித்ததினாலும், பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார். நான் பிதாவினின்று புறப்பட்டு உலகத்திற்கு வந்தேன்; மறுபடியும் நான் உலகத்தைவிட்டுப் பிதாவினிடத்திற்குப் போகிறேன் என்றார். அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: இதோ! இப்போது வெளிப்படையாய்ப் பேசுகிறீர்; உவமையொன்றும் நீர் சொல்லுகிறதில்லை. யாவற்றையும் நீர் அறிந்திருக்கிறீர்என்றும், எவனும் உம்மைவினவ உமக்கு அவசரமில்லையென்றும் இப்போது அறிந்திருக்கிறோம். இதன்நிமித்தமே சர்வேசுரனிடமிருந்து புறப்பட்டீர்என்று விசுவசிக்கிறோம் என்றார்கள்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

## ஐம்பதினாயிரம் அகதிகள்

அமெரிக்க தேசியகத்தோலிக்கசேமவாழ்வச் சங்கத்தின் ஆதரவிலே ஐரோப்பாவில் தங்கள்நாடுகளிலிருந்து இடம்பெயர்க்கப்பட்ட ஐம்பதினாயிரம் பேர் அமெரிக்கஐக்கியதேசத்தில் குடியேற்றிவைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களில் ஐம்பதினாயிரமாம்ஆளான ஜான் சாக் றாள்கி என்பவர் அங்கு போய்ச்சேர்ந்து நியூயோக்நகரிலே கப்பலைவிட்டுஇறங்கியபோது அவருக்கு ஓர் விசேஷ வரவேற்பு அளிக்கப்படலாயிற்று. வாலிபவயசுடைய ஓர் போலிஷ்காரரானஇவர் தனதுமனைவியுடனும், இருபிள்ளைகளுடனும் அங்கு ஓர் கமக்காரராகவேண்டுமென விரும்புகின்றார். 1948-ம்ஆண்டு செய்யப்பட்ட சட்டத்தின்படி இதுவரையிலே ஐரோப்பாவிலிருந்து இடம்பெயர்க்கப்பட்டவர்களாய் 1,38,000 பேருக்குமேல் போய் அத்தேசத்தில் குடியேறி இருக்கின்றார்கள். சமீபத்திலே அங்கீகரிக்கப்பட்டுள்ள புதியசட்டப்படி இத்தொகை 3,59,000 பேராக்கப்பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதாகொடுத்த செபமாலை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

செபிப்பாயானால், நீ நன்றாயிருப்பாய்; ஒருநாள் நான் உன்னை என்நேசமகனைக மறுபடியும் அரவணைப்பேன்" என்றாள்.

போனபுதிதில் அவன் அடிக்கடி கடிதம்எழுதினான். தன்னைப்பற்றி அவன் அதிகம் எழுதுவதில்லை. அவன் என்னவிதமான கல்வி கற்றுவந்தான் என்று அவளுக்குத்தெரியாது. கடிதங்களில் தான் அவளை நேசிப்பதாகச் சொல்வான். அவள்செய்த உபகாரங்களுக்கு நன்றிதெரிவிப்பான். யாவும் நன்றாயிருக்கிறது; வீட்டுக்கு வரக் கொஞ்சக்காலம்பிடிக்கும் என்றும் தெரிவித்துவந்தான்.

தாயோ இதைவிட அதிகம் அறியவிரும்பினாள். யோசேப் தன்னைப்பற்றி ஏன் எழுதுவதில்லை? நான்கொடுத்த செபமாலையை இன்னும் வைத்திருக்கிறானா? அதை அடிக்கடி பயன்படுத்துகிறானா? இவைகளைப்பற்றி இரண்டு கடிதங்களில் அவள் விசாரித்தாள். இந்தக் கடிதங்கள் அவன்கையிற் கிடைக்கவில்லைப்போலும். அவன் பதில்எழுதுகையில் இவைகளைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவேயில்லை. அப்படியானால் அவன் தன் வாக்குறுதியை மறந்துவிட்டானா? இல்லை, இல்லை, அவன் ஒருபோதும் அவ்விதம்செய்யமாட்டான்.... செபத்தில் ஆறுதல்பெறுவதைத்தவிர வேறு ஆகக்கூடியது ஒன்றுமில்லைஎன்று அவள் அறிவாள். யோசேப்புக்காகத் திரும்பத்திரும்பக் கடவுளைப் பிரார்த்தித்துவந்தாள். "நேச ஆண்டவரே, தேவதாயே, அவன் தன்செபமாலையை மறக்கும்படி விடாதேயும்" என ஒவ்வொரு மன்றாட்டின் இறுதியிலும் பிரார்த்தித்துவந்தாள்.

அவள் கடின நோய்வாய்ப்பட்டுப் பாயும்படுக்கையுமானாள். வைத்தியர்கள்யாவரும் அவளைக் கைவிட்டனர். அவளுடைய மகன்எங்கே? அவள் உயிருடனிருக்கும்போதே வருவானா? "சர்வேசுரா, என்னை என்ன வேண்டுமானாலும் செய்யும்; ஒரு நிமிஷமாவது என்மகனை நான் பார்க்கக் கிருபைசெய்யும்; அவனிடம் ஒரேஒரு கேள்விமாத்திரம் கேட்கவேண்டும்; அதன்பின் நான் சந்தோஷத்துடன் உம்மிடம்வருவேன்" என அவள் திரும்பத்திரும்பக் கடவுளைப் பார்த்து மன்றாடிக்கொண்டாள்.

(தொடரும்)

## எரிந்துபோன பஸ்

தென்மேற்கு பஸ்கம்பனியைச்சேர்ந்த பஸ்ஒன்று சென்ற வெள்ளிக்கிழமை இரவு கொழும்பு-அழுத்துகாமத்தெருவிலே வெருவலை றெயில்வேசந்திக்கு எதிரே தீ பற்றிப்பிடித்து எரிந்துசாம்பலாயிற்று. அவ்விடத்துக்குப் பின்புறமாக இருந்தவீடும் தீப்பிடித்து ஓரளவு சேதமடையலாயிற்று. பஸ்ஸில்சென்றபிரயாணிகள் 13 பேரும் யன்னல்கள்வழியாகக் கீழேகுதித்துக் காயமின்றித் தப்பிக்கொண்டனர். பெற்றோல்தாங்கி திடீரெனக் கீழே விழுந்து தீப்பற்றிஎரியத்தொடங்கியமையே இந்தப்பஸ்விபத்துக்குக் காரணம்என்று சொல்லப்படுகிறது.

## மன்னார்த் தமிழ் ஆசிரியர்களின் சுற்றுப்பிரயாணம்

9-4-50 ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் 5-30 மணிக்கு மன்னார் அர்ச். செபஸ்தியார் கோவிலிலிருந்து ஆரம்பமான மன்னார்த் தமிழ்ஆசிரியர்களின் இலங்கைச்சுற்றுப்பிரயாணம் 24-4-50 திங்கட்கிழமைகாலை 5-30 மணிக்குத் திருப்திகரமாக நிறைவெய்திற்று. இப்பிரயாணத்திலே மன்னார் — யாழ்ப்பாணத் தமிழ்ஆசிரியர்களின் ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகச் சமுகங்கொடுத்த மூன்று யாழ்ப்பாண ஆசிரியர்உட்படப் பன்னிருஆசிரியரும் பிறரும் கலந்துகொண்டார்கள்.

மன்னாரிலிருந்து புறப்பட்ட நாம் அன்றுகாலை 8 மணிக்கு மருதமடுச் செபமாலைத்தாயாரின் திருப்பாதத்திலே எம்மை அடைக்கலமாகஒப்புக்கொடுத்து வேண்டுதல்செய்து இளைப்பாறிச் செவ்வாய்க்கிழமை அதிகாலை பிரயாணத்தைத்தொடக்கி அனுராதபுரங்கடந்து புத்தளந்தாண்டித் தெதுறுஓயாநதிக்கரையில் உல்லாசமாகத் தங்கியிருந்தோம். அதன்மேல் சிலாபத்தையடைந்து பிரசித்திபெற்ற முன்னீஸ்வா ஆலயத்தைப் பார்வையிட்டு, மாருவிற் சேமக்காலையில் இருந்துவரும் மகிமைவாய்ந்த பாடுபட்ட திருச்சுரூபத்தைத் தரிசித்து வணங்கி நீர்கொழும்புசென்று ஆனந்தமாகஇளைப்பாறினோம். அங்கே எமக்குச் சம்மனசுச்சுவாமிகளின் கல்லறை அமைந்துள்ளகோவில் நவீன சித்திர வேலைப்பாடுடையதாய் அழகும், பொலிவுமான காட்சியளித்தது.

மறுநாள் புதன்கிழமை நீர்கொழும்பிலிருந்து புறப்பட்டுக் காலை 10 மணிக்குக் கந்தானைசேர்ந்து அங்கே கிளாஸ், கோப்பை, பீஸ், குச்சிப்பெட்டி, சவர்க்காரம் ஆதியன செய்யப்படும் நிலையங்களை ஆராய்வாகப் பார்வையிட்டுக் கொழும்புநகரை அடைந்தோம். அந்நகரிலே லேக்ஹவுஸ், பாராளுமன்றக் கட்டிடம், விக்ரோறியாப்பாக்கம், துறைமுகம், நூதன சித்திரச்சாலைகள் கொண்ட நகெகொடைப்பன்சாலை, நூதனசாலை, தெகிவலை மிருகக்காட்சிச்சாலை, இரத்மலானை ஆகாயவிமான நிலையம் ஆதியவற்றைப் பார்த்துக் கொண்டு 13-4-50 வியாழக்கிழமை இரவு காலிசென்று இளைப்பாறினோம். அங்கே வெள்ளிக்கிழமை நந்தாவனம், கோட்டை, கடைவீதி, துறைமுகம் ஆதியனபார்த்துவிட்டுப் பிரயாணமாகி டெனியாயாவில் தங்கினோம்.

சனிக்கிழமை டெனியாயாவிலிருந்து புறப்பட்டு ஏற்றமானபாதைகளால் மலைக்காட்சிகளை ரசித்துக் கொண்டு புளுத்தோட்டைப்பாஸால் (கணவாய்) இறங்கி றக்குவானைசேர்ந்து தேயிலைத் தொழிற்சாலையைப் பார்வையிட்டு மதிய உணவருந்தி மாதம்பை, காவத்தை, பெல்மதுளை எனுமிடங்களைக்கடந்து இரவு 8-30 மணிக்கு இரத்தினபுரிசென்று அங்கு இளைப்பாறினோம். 16-4-50 ஞாயிறன்று காலை இரத்தினபுரியிலே திவ்வியபூசை கண்டு கடைத்தெரு, காரியாலயங்கள் ஆதியனபார்த்துப் பிரயாணமாகிப் பொத்துவில், பெல்மதுளை, ஒப்பனேக்கன், பலாங்கொடை, பெலகிலோயா, கல்டுமுல்லை, கொஸ்லந்தை எனும் இடங்கள்தாண்டி டியலுமா நீர்வீழ்ச்சியையும் கண்டுகொண்டு புத்தளவ, வெள்ளவாய் எனுமிடங்கள்வழியாகப் மொனறகலைசேர்ந்து இரவுதங்கினோம்.

அடுத்தநாள் அங்கிருந்துபுறப்பட்டு அக்கரைப்பற்றைக்கடந்து கல்லோயா சென்று கல்லோயாக் குளக்கட்டுவேலையைச் சுற்றிப்பார்த்துக் கல்முனையையடைந்து சாயந்தரம் 5 மணிக்கு மட்டக்களப்பைச்சேர்ந்து அங்கு சந்நியாசர்களால் கண்ணியமாக வரவேற்கப்பெற்றோம். 18-4-50 செவ்வாயன்று மாந்தீவுக் குஷ்டரோகர்சாலையையும், ஏறாவூர், செங்கலடி, பருத்தித்தலவா, தோடம்பழத்துக்குப் பேர்போன பிபிலே, நணுகலை, கொப்ரன் எனும் இடங்களையும் பார்த்து உயரமான மலைகளைச்சுற்றி வட்டமிட்டுக்கொண்டு நடுவேயுள்ள வதுளையை இரவு 9 மணி வரையில் அடைந்தோம்.

பின்னர் மறுநாள் அங்கிருந்து அடம்பிட்டிதாண்டிப் பெலிமடையிற் தங்கி இளைப்பாறி மலைக்காட்சிகளைக் கண்டு 20-4-50 காலை 6 மணிக்குப் பெலிமடையிலிருந்து கக்கலை மாதிரித் தோட்டஞ்சென்று அதைப்பார்வையிட்டுப் பின்னர் நாம் நெடுநாள் காண ஆசித்ததும், ஜில் ஜில்லென்று குளிர் காற்று வீசுவதும், 6,200 அடி உயரமுமான நுவரெலியநகரைக் கண்குளிரக் கண்டு ஆனந்தித்தோம். அதன்மேல் நனுஓயா, தலவாக்கெல்லை, சென்கிளேயர்நீர்வீழ்ச்சி, டெவண் நீர்வீழ்ச்சி ஆதியனகண்டு 3-30 மணிக்குக் ஹற்றனையடைந்து டிக்கோயாவினூடாக மஸ்கேலியாசென்று சிறிது இளைப்பாறி இரவு 11 மணிக்குப் புறப்பட்டுச் சிவனொளிபாதமலை மீதேறிச் சூரியன் உதிக்கும் அழகுவாய்ந்த காட்சி பார்த்து வெள்ளிக்கிழமைகாலை 9 மணிக்கு மஸ்கேலியாவுக்குத் திரும்பி இளைப்பாறியபின் நோட்டன்பிறிட்ஜ் பாதையால் பி. ப. 1 மணிக்குப் பிரயாணமாகி வழியில் லக்ஷபான நீர்வீழ்ச்சி, நோட்டன்பிறிட்ஜ் என்பன கண்டு டிக்கோயாவழியாய் மீண்டும் ஹற்றன்சேர்ந்து, அதன்மேல் வட்டவளை, நாவலப்பிட்டி, உலப்பனை ஆதியனகண்டு கம்பளையில் தங்கி, மறுநாள் சனிக்கிழமை பேராதனைத்தோட்டத்தைப் பார்வையிட்டு, இயற்கை அழகு வாய்ந்த கண்டிநகரை அடைந்து. அங்கே போகாம்பரவாவி, தாலதமாளிகை, மரக்கறி மாக்கெற்றுகள் ஆதியன சுற்றிப்பார்த்துவிட்டுக் கடுகஸ்தோட்டை, கோக்கேவாமிகுந்த மாத்தளை, மடவெலா, நாலந்தை, தம்பளை எனுமிடங்களினூடாகக் காசியப்பனின் வீரத்தையும், சித்திர நுட்பத்தையும்காண்பிக்கும் சிகிரியாவை அடைந்து சிகிரியமலையிலேறி அதன் சிறப்புகளைக் கண்ணுற்றபின் திரிகோணமலைக்குப் பிரயாணமானோம். போகும்வழியிலே கபறணையெனும் பிரசித்த நாற்சந்தியைக்கடந்து இரவு திரிகோணமலையில் தங்கி இளைப்பாறினோம்.

23-4-50 ஞாயிறன்று திரிகோணமலை அர்ச். வியாகுலமாதாகோவிலிற் திவ்வியபூசைகண்டு கோணேசர்மலை, கோட்டை, துறைமுகம், வெந்நீரூற்றுக்கினியா, கடைவீதியென்பனகண்டு கபறணைச்சந்தியால் திரும்பிப் பொல்லநறுவைபோய்ச்சேர்ந்தோம். வழியிலே கந்தளாய், மின்னேரிக்குளங்களைக் கண்டோம். பழைய அரசர்களின் கைத்திறனை விளக்கிக்காட்டும் பலசமாதிகளும், விகாரைகளும், தகோபாக்களுமுள்ள பொல்லநறுவையைச் சுற்றிச்சுற்றி ஆச்சரியத்துடன் வைத்த கண்வாங்கமனமின்றிப் பார்த்துக் கொண்டிருந்தோம். அங்குள்ள தூபாராமசமாதி, வட்டதாகே, நிசங்கமல்லன் சிலாசாசனம், இராசமாளிகை, உருவிகாரை, கல்விகாரை, நங்கோட்விகாரை ஆதியனவும் இன்னும் பிற கட்டிடங்களும் இக்காலச்சிற்பிகளும் பிரமித்து நோக்கத்தக்க வகையில் அமைந்துள்ளகாட்சி விபரிக்குந்தன்மையன்று. இக்காட்சிகளாலே அவ்விடம் விட்டுவெளியேற மனமற்றவர்கள்போல கபறணைக்கும், பின்னர் அநுராதபுரம், மதவாச்சிகண்டு எங்களுடன் வந்த யாழ்ப்பாண ஆசிரியர்களுக்குப் பிரியாவிடைகூறிப் புகையிரதத்தில் அவர்களைப் பயணமனுப்பிவிட்டுப் பரிசுத்த செபமாலைஇராக்கினியின் பேரருளால் எவர்க்குமே எவ்வித அபாயமுமின்றிச் சிந்தாத்திரையாய் எமது மன்னார்ப்பதியைத் திங்கட்கிழமைகாலை 5-30 மணிக்கு அடையலானோம்.

Gr. No. 116. Eng.

## தீயசுகாத்தியம் சாதாரண சலதோஷத்தை உண்டுபண்ணுகின்றது.

வருடந்தோறும் வெவ்வேறுகாலங்களிலும், உஷ்ணத்தின்உக்கிரம் அடையும் பல்வேறுபாகைகளுடனும் சாதாரண சலதோஷம் தனது அவலட்சணதலையை நீட்டுகின்றது. சிலவேளைகளிலே மாரிகாலத்தின் ஆரம்பத்தில். சிலவேளைகளில் அதன்முடிவில்.

இதுசம்பந்தமாய்க் கூறுமிடத்துச் சுகாத்தியம் மனிதவாழ்க்கையில் விசேஷமாற்றங்களை உண்டுபண்ணுகின்றது. நீடிய மழைகாலங்களும், மூடுபனியும், மந்தாரமும் மக்களின் சுகவாழ்க்கையிலே துன்பத்துக்கேதுவானகாரியத்தைச் சாதித்துவிடுகின்றன. வழக்கமாக உண்டாகும் மனவாட்டம், மந்தபுத்தி, தலைக்குத்து, புண்பட்ட தொண்டை, சுவாசம்வாங்க முடியாத நாசி, அடிக்கடி காய்ச்சல் என்பனவான அதே அடையாளங்களை நம்மில் அநேகர் கண்டுகொள்ள அதிக காலஞ்செல்வதில்லை.

மற்றெதைக்காட்டிலும் அதிகம் சங்கடத்தை உண்டுபண்ணுவதும், நோய் ஏறிக்கொண்டுசெல்வதும் நோயாளி நோயை எதிர்த்து நின்றுபிடிப்பதிலே அதிகமாகத் தங்கியிருக்கிறது. அதனால் அதிகம் கூடியவிதமாய் நோயை எதிர்த்து நின்றுபிடிப்பதை நிலைப்படுத்திக்கொள்வதில் கவனம் எடுக்கப்படவேண்டும். மேலும் சாதாரண சலதோஷம் உள்ளபடியே கடுமையான வருத்தமாகவும் மாறக்கூடுமென்பதை ஞாபகத்திலிருத்துவதுசாதாரணபொது அறிவேயாகும். அத்துணை தீங்கற்றதாய்க் காணப்படுவதே, அற்ப சலதோஷம் அதிகம்மோசமான நிலையைக் கொண்டுவராதபடி அவசியமான பாதுகாப்புகளைத் தேடிக்கொள்வதற்கு அதிகம் போதியநியாயமாகும்.

முதன்முதலாகச் சலதோஷம் தொற்றிக்கொண்ட ஆட்களிலிருந்து விலகிக்கொள்ளவேண்டும். அதனால் சனங்கள் அதிகமாகத் திரண்டு கூடியிருக்கும் இடங்களிலிருந்து கூடியமட்டும் விலகிக்கொள்ளவேண்டும். இருமுதல், சிரித்தல், உரத்துச் சம்பாஷித்தல் ஆதியன விஷத்தை இலகுவிலே பரப்பக்கூடும்.

அபாயகரமானகாலங்களிலே இன்றியமையாத ஓர் நல்மருந்து, ரொனிக் குயினைனும், விற்றமின் சீ. எனும் ஜீவசத்துமே. இவ்விரு மாற்றுமருந்துகளையும் கலந்து அருந்துவதானது, நோயை எதிர்த்து நின்றுபிடிக்குந்தன்மையை அதிகரிக்கச்செய்கின்றது. அதனால் சாதாரண சலதோஷத்தினால் ஏற்படக்கூடிய அச்சம்விளைக்கும் கலப்புநோய்களில் ஒன்று உண்டாகக் கூடிய சந்தர்ப்பங்களைக் குறைத்துவிடுகின்றது.

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திருஇருதயநாதரின் இரக்கத்தினாலும், பரிசுத்த லூர்துநாயகியின் வேண்டுதலினாலும் எனதுபுத்திரியின் வருத்தம் சுகமானதினால் அதற்குநன்றியாக இதனைப் பிரசுரிக்கிறேன். இவர்களின் நாமங்கள் புகழப்படுவதாக. தே. மேரி

இந்த நீண்ட பிரயாணதூரம் நாலு மைல்குறைய 1,400 மைலாகும். இப்பிரயாணத்தை முன்னின்றுநடாத்திய எங்கள் சங்கத்தலைவருக்கும், காரியதரிசி M. S. அலோய் அவர்கட்கும், ஆசிரியர் M. செபஸ்ரியாம்பிள்ளை அவர்கட்கும், எங்களுக்கு ஆதரவு கூறித் தைரியமூட்டிய ஆசிரியர் ஜெரேமி அவர்கட்கும் என் நன்றி உரியதாகுக.

ஏ. செபஸ்ரியன் குரூஸ்

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39 Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 11 1950.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org